கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
30-3-1975
50 காசு






சமையலுக்குப் பெருந்துணை
ஓய்வில்லா தாய்மார்கள் சுவையான சமையல் செய்ய சுலபமான வழி! இந்த 3 பெருந்துணைகளைப் பின்பற்றி, பல்வேறு இன்பமூட்டும் தின்பண்டங்களைத் தயாரித்து மகிழுங்கள்!......
பிரவுன் & போல்ஸன்
கார்ன்ஃப்ளவர்
கபாப், சமோசா, பட்கஸ் ஆகியவற்றை அதிமெல்லியதாகவும் மொரமொரப்பாகவும் ஆக்குகின்றது. குழைவான சுவைமிகு சூப், கிரேவி ஆகியவற்றைக் கெட்டியாகத் தயாரிக்க உதவுகிறது.
பிரவுன் & போல்ஸன்
வெரய்ட்டி கஸ்டர்டு பவுடர்
6 இனிமையான சுவை வகைகள்! குடும்பத்தினரை மகிழ்விக்க புட்டிங், பாயசம், ரபடி ஆகிய பல்வேறு இன்சுவையுள்ள பண்டங்கள் தயாரிக்க சாலச் சிறந்தது.
ரெக்ஸ்
பேகிங் பவுடர்
கேக், பிஸ்கோத்து, பக்கோடா, பூரி, குலாப் ஜாமூன் ஆகியவற்றை சுவைபட அதிமென்மையாகத் தயாரிக்க உதவுகிறது. சிறிதளவே சிறப்பாகச் செய்து முடிக்கிறது!
Brown & Polson Cornflour
REX BAKING POWDER
Brown & Polson
உங்கள் சமையல் உன்னதமாய் இருக்க உயர்ந்த சாமானையே உபயோகியுங்கள்
பிரவுன் & போல்ஸன் மற்றும் ரெக்ஸ்
தரமுயர்ந்த தயாரிப்புகள்
அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப்படுத்தப்பட்டவை—கிடைப்பவைகளிலேயே சிறந்தவை.
கார்ன் பிராடக்ட்ஸ் கோ.(இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், எச். ஸோமானி மார்க், பம்பாய் 400 001.

OBM 3886 TM



ஏப்ரல் 13'
கோகுலம்
புத்தாண்டு இதழிலிருந்து
திருமுருக கிருபானந்தவாரியார்
எழுதும்
அறநெறி
வாண்டுமாமா
எழுதும்
நந்து
சுந்து
மந்து...
சித்திரத் தொடர்கதை
புத்தம் புதுப்பகுதிகள் எத்தனையோ!
ராட்சத மிருகங்கள்
மருத்துவம்
பிறந்த கதை...

‘கோகுலம்’ பரிசளிப்பு விழா






மார்ச் 17ந் தேதி கோகுலம் கிரிக்கெட் விமர்சனப் போட்டியின் பரிசளிப்பு விழா சென்னை சேத்துப்பட்டு கிறிஸ்துவக் கல்லூரிப் பள்ளி தலைமை ஆசிரியர் திரு கிளமெண்ட் ஃபெலிக்ஸ் தலைமையில் நடைபெற்றது. கல்கி ஆசிரியர் திரு கி. ராஜேந்திரன் நகைச்சுவை மிளிர வரவேற்புரை நிகழ்த்தினர். திரு ஏ. ஜி. ராம் சிங்ஜி கிரிக்கெட் ‘கிட்’களை வெற்றி பெற்ற மாணவன் வி. எஸ். ரங்காவுக்கு வழங்கினர். தமிழகக் கிரிக்கெட் சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ எஸ். ஸ்ரீராமன் சிறுவனைப் பாராட்டிப் பேசினதுடன் திரு. ராம் சிங் அவர்களின் பெருமையையும் எடுத்துரைத்தார். பாரி நிறுவனத்தார் மாணவர்களுக்கு வழங்கிய மிட்டாய்களுடன் தொடங்கிய விழா கல்கி உதவி ஆசிரியர் திரு குண்டுமணியின் நன்றியுரையுடன் இனிது முடிந்தது.



குண்டுமணி



பள்ளி முதல்வர் — ரங்கா — கல்கி ஆசிரியர் — ராம் சிங்ஜி — ஸ்ரீராமன்

கோகுலம்

மலர் 3 □ இதழ் 26
மார்ச் 30, 1975
ஆனந்த, பங்குனி 16

சந்தா விவரம்:
உள்நாடு:
ஒரு வருடம் ரூ. 13-00
ஆறு மாதம் ரூ. 6-50
வெளிநாடுகள்:
ஆண்டுச் சந்தா ரூ. 27-50




உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
-- பாரதியார்

மெக்ஸிகோவில் சூரியன் கோயில்

பிரமிட் என்றதும் எகிப்திலுள்ள கட்டடங்கள்தான் உங்கள் நினைவுக்கு வரும். ஆனால் இன்னொரு பிரமிட் மெக்ஸிகோ நாட்டில் இருக்கிறது. இது உண்மையில் பிரமிட்டில்லாவிட்டாலும் தோற்றத்தில் அதே மாதிரி இருப்பதினால் இதையும் பிரமிட் என்றே கூறலாம். இது மன்னர்களின் சமாதியல்ல. சூரிய தேவனுக்கான கோயில். மத்திய மெக்ஸிகோவில் டால்டெக்ஸ் இனத்தவரின் (Taltecs) தலை நகரமான டியோடிஹாகன் (Teotihau-can) என்னும் இடத்தில் இந்தப் பிரமிட் உள்ளது. அஸ்டெக் என்ற இனத்தவருக்கு முன்பாக 11, 12ம் நூற்றாண்டில் இங்கு வந்தவர்கள் இந்த டால்டெக்ஸ்கள். இவ்விரு இனத்தவரின் இணைப்பிலே எழுந்ததுதான் இங்குள்ள மிகப் புராதனமான நாகரிகம். மிகச் சிறந்த கட்டிடக் கலைஞர்கள், மர வேலையின் விற்பன்னர்கள் என்று கருதப்படும் இவர்கள் கற்களைச் சாந்து கொண்டு இணைத்து உறுதியான கட்டிடங்களை எழுப்பி யிருக்கிறார்கள். டியோடிஹாகனிலுள்ள புராதனக் கட்டிடங்களிலேயே மிகப் பெரியது இந்தப் பிரமிட்டுத்தான். நான்கு அடுக்காக உயர்ந்துள்ள இதன் உயரம் 200 அடிகள். அடுக்குகளுக்கு இடைப்பட்ட சரிவின் தன்மை மாறுபட்டிருப்பதானது இதற்கு மிகப் பெரியதொரு கட்டிடத்தின் தோற்றத்தை அளிக்கிறது. அடித்தளம் 700 அடிகள் கொண்ட சதுரம். காயவைத்த பச்சைக் களிமண்கற்களால் கட்டப்பட்டு அதன்மீது பூச்சு செய்யப்பட்டுள்ளது.

இதே நகரத்தில் இதற்கு அடுத்த பெரிய கட்டிடமும் ஒரு பிரமிட்டுதான். அது சந்திரனுக்காக எழுப்பப்பட்டது. டால்டெக் — அஸ்டெக் இந்தியர்களின் மத நம்பிக்கையின்படி சந்திரன் சூரியனுடைய மனைவி. இது நமக்கு வியப்பளித்தாலும், பகல் இரவு, சூரியன் சந்திரன் வழிபாட்டைப் பார்க்கும் போது இவர்கள் பாரதத்துடன் தொடர்புடையவர்களாக இருக்கலாமென்று கருத இடமிருக்கிறது. சூரியப் பிரமிட்டைச் சுற்றிக் குருமார்களின் வீடுகள் இருந்ததாகவும் உச்சியிலே ஒரு கோயில் இருந்திருக்கலாமென்றும் ஆராய்ச்சியாளர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இன்றைய பிரமிட்டில் உச்சியில் கோயில் ஏதுமில்லை.





மந்திரப் பறவை

நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னே பாரசீக நாட்டிலே ஓர் ஏழை விறகுவெட்டி இருந்தான். அவனுக்கு இளமையும் அழகும் மிக்க ஒரு மனைவியும் அகமது முகம்மது என்ற இரு பையன்களும் இருந்தார்கள். ஒரு நாள் விறகுவெட்டி மலை மீது சுள்ளிகளைப் பொறுக்கிக் கட்டி வைத்திருந்தான். அப்போது எங்கிருந்தோ பறந்துவந்த ஒரு விநோதமான பறவை அதன் மீது ஒரு முட்டையை இட்டுவிட்டுப் போயிற்று. பொன் நிறமாக இருந்தது அது. அதைக் கொண்டு போய்த் தன் மனைவியிடம் கொடுத்தான் . விறகுவெட்டி. அது விலைமதிப்புள்ள முட்டை என்பதை உணர்ந்த அவன் மனைவி அதை நகரில் உள்ள மாலிக் என்ற பெரிய வியாபாரியிடம் இருநூறு பொற்காசுகளுக்கு விற்று வந்தாள்.

தங்க முட்டைக்குக் கிடைத்த தனத்தைக் கண்டு மகிழ்ந்த விறகுவெட்டி, ''இதைப் பற்றி யாரிடமும் எதுவும் சொல்லாதே. இது நம் ஏழைமையைப் போக்க ஆண்டவன் நமக்கு மட்டுமே அளித்த உதவி'' என்று கூறினான். மறு நாளும் அவனது விறகுக் கட்டின் மீது அதே பறவை வந்து இன்னொரு முட்டையிட்டு விட்டுச் சென்றது. அதையும் அவன் மனைவி அதே வியாபாரியிடம் விற்றுப் பணமாக்கி வந்தாள்.

வியாபாரிக்குப் பேராசை ஏற்பட்டது. விறகுவெட்டியின் மனைவியிடம் அந்த முட்டை கிடைத்த விதம் பற்றிக் கேட்டபோது அவள் சொல்ல மறுத்துவிட்டாள். ஆகவே, மாலிக் என்ற அந்தச் செல்வந்தன் ஒரு சூனியக்காரியின் உதவியை நாடினான். அந்தக் கிழவி தன் மந்திர சக்தியினால் தங்க முட்டை கிடைக்கும் மார்க்கத்தை அறிந்து வியாபாரியிடம் கூறினாள். ''அந்தப் பறவையினால் இதையும்விடப் பெரிய அதிர்ஷ்டமெல்லாம் பெறலாம். ஆனால் அத்தகைய பாக்கியத்தைப் பெற முதலில் அதைப் பிடிக்க வேண்டும். பின்பு அதைக் கொன்று சாப்பிட்டுவிட வேண்டும். அப்படி அதை உணவாகக் கொள்ளும்போது அதன் தலை யாரிடம் இருக்கிறதோ, அவர்கள் பரந்த நாட்டின் அரசனாகலாம். அதன் கால்களை வைத்திருப்பவர்களுக்கு ஒவ்வொரு நாளும் காலையில் தூங்கி எழுந்திருக்கும்போது அவர்களுடைய தலைமாட்டில் நூறு பொற் காசுகள் இருக்கும்'' என்று கூறினாள் மந்திரக் கிழவி.

செல்வந்தனான மாலிக் தனக்கு அந்தப் பாக்கியம் கிடைக்க அவள் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். கிழவியும் அதற்கு இணங்கினாள். விறகுவெட்டியின் அழகிய இளம் மனைவியின் மனத்தைத் தன் மந்திர சக்தியினால் விஷமாக்கினாள். வியாபாரி மாலிக்கின் மீது தணியாத மையல் ஏற்படச் செய்தாள் சூனியக்காரி. மாலிக் எது கேட்டாலும் அதைச் செய்யும் நிலைக்கு விறகுவெட்டி மனைவியின் மனம் கெட்டுவிட்டது. தனவந்தன் மாலிக்குக்கு வேண்டியதெல்லாம் அந்த மந்திரப் பறவைதானே? ஆகவே அவன் போதனைப்படி அவள் தன் விறகு வெட்டிக் கணவனிடம் அந்த அதிசயப் பறவையைப் பிடித்துக் கொண்டு வரும்படி வற்புறுத்தினாள். மனைவியின் தொல்லை தாங்காத அவனும் அந்தப் பறவையை ஒரு நாள் பிடித்துக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்துவிட்டான்.

பறவை கைக்கு வந்ததும் கிழவியிடம் அடுத்துத் தான் செய்ய வேண்டியது என்ன என்று கேட்டாள் விறகு



வாண்டு மாமா

வெட்டியின் மனைவி. கிழவி சொன்னாள்: ''மாலிக்கின் காதலைப் பெற்று அவன் கணவனாக வேண்டுமானால் நான் சொல்லுகிறபடி செய். சூப் தயார் செய். அதில் அந்தப் பறவையைக் கொன்று போடு. அதன் தலையும் அதன் கால்களும் அதில் அவசியம் இருக்க வேண்டும். இப்படித் தயாரித்த சூப்பை உன் காதலன் சாப்பிட்டானால் இப்போது உன்னைவிடப் பத்து மடங்கு அதிகமான அன்பு உன் மீது அவனுக்கு ஏற்படும். உன்னை என்றென்றும் பிரியமாட்டான்.''

பைத்தியக்காரியான விறகுவெட்டியின் இளம் மனைவி கிழவி சொன்னபடியே சூப் தயாரித்துவிட்டு மாலிக்கின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். விதி செய்த சதியினால் அந்த வியாபாரி வரத் தாமதமாயிற்று. ஆகவே இவள் சூப்பை அடுப்பில் மூடி வைத்துவிட்டுக் காதலனைத் தேடிக் கொண்டு கிளம்பினாள். இந்தச் சமயத்தில் விறகுவெட்டியின் பிள்ளைகளான அகமதும் முகம்மதும் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்தார்கள். வந்தவர்களின் மூக்கை அம்மா தயாரித்து வைத்திருந்த சூப்பின் வாசனை துளைத்தது. நல்ல பசி வேறு அவர்களுக்கு. அம்மாவைக் காணாததால் தாங்களே ஆளுக்குக் கொஞ்சம் அந்தச் சுவையான சூப்பை எடுத்து ருசித்துச் சாப்பிட்டு அப்படியே வைத்து மூடினார்கள். இப்படிச் சாப்பிடும்போது அகமதுக்குப் பறவையின் தலையும் முகம்மதுக்கு அதன் கால்களும் கிடைத்தன. அவற்றைப் பற்றிய மகிமை அவர்களுக்குத் தெரியாவிட்டாலும் அது அழகாக இருப்பதைக் கண்டு அதைத் தாயத்துப் போலக் கயிற்றில் கட்டி அவரவரும் தங்கள் தங்கள் கழுத்தில் அணிந்து கொண்டு விட்டார்கள்.

இதற்குள் விறகுவெட்டியின் மனைவி தனவானை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தாள். அவன் முன்னால் சூப் உள்ள பாத்திரத்தை வைத்தாள். மாலிக்கோ அவசரமாகச் சூப்பினுள் கரண்டியை விட்டுத் துழாவினான். மந்திரப் பறவையின் தலையோ காலோ அதில் இருந்தால் அல்லவா கரண்டிக்கு அகப்படும்? இதனால் ஆத்திரம் கொண்ட மாலிக் வெறி கொண்டவனாகக் கத்தினான். அவளை ஏசினான்.

''தவறு என்னுடையதல்ல. நீங்கள் சொன்ன நேரத்தில் வரவில்லை. உங்களைத் தேடி நான் வந்தேன். அப்போது பசியோடு பள்ளியிலிருந்து திரும்பிய என் குழந்தைகள் அடுப்பிலுள்ள இந்தச் சூப்பைக் கண்டு தாங்களே பரிமாறிக் கொண்டு சாப்பிட்டிருப்பார்கள் போலும். கொஞ்சம் பொறுங்கள். இதோ, நொடியில் வேறொரு பறவையைக் கொண்டு இதைவிட ருசியான சூப் தயாரித்துத் தருகிறேன்'' என்றாள். அசட்டுப் பெண். பறவை சூப்புக்கு ஆசைப்பட்டவனா மாலிக்?

''எனக்கு வேறு பறவையின் தலையும் காலும் வேண்டாம். அந்தப் பறவையினுடையவைதான் வேண்டும். உன் பிள்ளைகளிடம்தான் அவை இருக்க வேண்டும். என் மீது உனக்கு உண்மையாகவே காதல் இருக்குமானால் உன் இரு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு என்னுடன் வா! நாம் அவ்விருவருக்கும் மயக்க மருந்து கொடுத்து நினைவிழக்கச் செய்து அவர்களிடமிருந்து அந்தத் தாயத்துக்களைப் பறித்துக் கொள்ளலாம்'' என்று கூறினான்.



ஆனால் அகமதும் முகம்மதும் கதவுக்குப் பின்னாலிருந்து இவர்கள் சம்பாஷணை முழுவதையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். ஆகவே, இனி இங்கிருந்தால் தங்கள் உயிருக்கு அபாயம் என்று எண்ணி ஓசைப் படாமல் பின்பக்கமாக வெளியேறி ஊரை விட்டே ஓடிவிட்டார்கள். வெகுநேரம் காத்திருந்து ஏமாந்த மாலிக் தனக்கு வர இருந்த அதிர்ஷ்டம் கைமாறிப் போய் விட்டதை அறிந்து ஆத்திரம் அடைந்து விறகுவெட்டியின் மனைவியை ஏசி இகழ்ந்து விட்டுப் போனான்.

இப்படித் தான் வஞ்சிக்கப்பட்டதை அறிந்த அவள் அழுது அழுது கண் இரண்டும் குருடாகி விட்டது. விறகு வெட்டியும் தன் இரு புதல்வர்களை இழந்ததையும் தன் மனைவியின் இழி செயலையும் எண்ணி எண்ணிக் கண்ணீர் விட்டதினால் அவன் கண் பார்வையும் மங்கிக் குருடானான்.

அகமதும் முகம்மதும் நீண்ட நாள் பிரயாணம் செய்தார்கள். ஒவ்வொரு நாளும் முகமது காலையில் எழுந்திருக்கும் போது அவன் தலை மாட்டில் நூறு பொற்காசுகள் தோன்றின. வழிச் செலவுக்கான தேவைகளையெல்லாம் அப்பொற்காசுகளைக் கொண்டு நிறைவேற்றிக் கொண்டார்கள் சகோதரர்கள். இப்படியாக இவர்கள் நடந்து வந்த பாதை ஓரிடத்தில் இரண்டாகப் பிரிந்தது. அப்படிப் பிரியும் இடத்தில் ஓர் அறிவிப்புப் பலகையும் இருந்தது. 'ஒன்றாகப் பிரயாணப்பட்டு வரும் இருவர், சேர்ந்து ஒரே பாதை வழி சென்றால் அவ்விருவரும் மரணம் அடைவார்கள். இந்த இடத்தில் அவ்விருவரும் பிரிந்து தனித்தனியே வெவ்வேறு பாதைகளில் செல்ல வேண்டும்.' இப்படியோர் எச்சரிக்கையைப் பார்த்த பிறகும் இருவரும் சேர்ந்து செல்லுவார்களா ? கண்களில் நீர் மல்கச் சகோதரர் இருவரும் ஆரத் தழுவிக் கொண்டு விடை பெற்று வெவ்வேறு பாதைகளில் தங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தனர்.

பல நாள் பிரயாணத்துக்குப் பிறகு முகம்மது ஓர் அழகான கோட்டை வாசலுக்கு வந்தான். அங்கே பல வாலிபர்கள் துக்கத்துடன் அழுது கொண்டு அமர்ந்திருந்தனர். அவர்களுடைய வேதனையின் காரணம் கேட்டான் முகமது. ''நாங்கள் ஒரு பெரிய செல்வச் சீமானின் புதல்வர்கள். இந்தக் கோட்டையில் உள்ள அழகியின் அன்பைப் பெறுவதற்கான முயற்சியில் எங்கள் பொருளையெல்லாம் இழந்து விட்டோம். ஆனால் அவள் அன்பை எங்களால் அடைய முடியவில்லை. ஓர் இரவு அவளுடன் தங்குவதற்கு நூறு பொற் காசுகள் தர வேண்டும். எங்களிடமிருந்த செல்வமெல்லாம் கொள்ளை கொண்டுவிட்டாள் அந்த வஞ்சகி. இப்போது வெறும் கையுடன் நாங்கள் எப்படித் திரும்பிப் போக முடியும்?'' என்றார்கள் அவர்கள். இதைக் கேட்ட முகம்மது, ''இது எனக்கு ஏற்ற இடம் தான்'' என்று கூறிக் கோட்டைக் கதவைத் தட்டினான். ''என்னிடம் நூறு பொற்காசுகள் உள்ளன. நான் இன்றிரவை இங்கு கழிக்க அனுமதி உண்டா?'' என்று கேட்டான்.

''தாராளமாக!'' என்று வரவேற்புக் கிடைத்தது. கோட்டைக்கு உரிமையாளியான அழகி தன்னுடைய பணிப் பெண் ஒருத்தியை முகம்மதிடம் அனுப்பி வைத்

தான், அவனுக்குப் பணிவிடை புரிய. வழிப் போக்கர்களிடம் இப்படிச் செய்து ஏமாற்றுவதுதான் அவள் வழக்கம். மறுநாள் காலை விடிந்தவுடன் பணிப் பெண், ''நீங்கள் வெளியே போகலாம்'' என்றாள் முகமதிடம். ஆனால் முகம்மது ஒருவாறு உண்மையை ஊகித்துக் கொண்டு ''நான் இன்னோர் இரவும் இங்கு தங்குவதாக உத்தேசம். இதோ இன்றைய இரவுக்கான கட்டணம்!'' என்று கூறித் தலையணைக்கடியிலிருந்து பொற்காசுகளை அள்ளி அவளிடம் கொடுத்தான்.

இந்த அதிசயத்தைக் கேள்விப்பட்ட எஜமானியாகிய அழகிக்கு உடனே உண்மை தெரிந்துவிட்டது. ''மந்திரப் பறவையின் கால்கள் இவனிடம் இருக்க வேண்டும். அதை எப்படியும் இவனிடமிருந்து அபகரித்துக்கொண்டு விடவேண்டும்'' என்ற முடிவுடன் அன்றிரவு பணிப் பெண்ணை அனுப்பாமல் தானே அவன் படுக்கையறைக்கு வந்தாள். முகம்மதுக்கு அளித்த மதுவிலே மருந்தைக் கலந்து கொடுத்து அவனை மயங்கச் செய்தாள். அவன் நன்கு தூங்கும்போது அவன் கழுத்திலிருந்த தாயத்தைக் கழற்றித் தன் கழுத்தில் அணிந்து கொண்டு பணியாளர்களைக் கொண்டு அவனைக் கோட்டைக்கு வெளியே கொண்டு போய்ப் போட்டு வரும்படி செய்தாள்.

காலையில் நினைவு பெற்றுக் கண் விழித்த முகம்மது தான் மலைப் பாதையில் கிடப்பதைக் கண்டு வேதனையுடன் அன்று பகல் முழுவதும் சுற்றினான். இரவு களைத்து போய்த் தூங்கியவன் மறுநாள் கண் விழித்தான். தலைக்கு அடியில் பொற்காசுகள் தோன்றவில்லை. அப்போதுதான் தான் அணிந்திருந்த தாயத்து கைமாறிப் போய்விட்டதை அறிந்தான் முகமது. மனம் உடைந்து போய்ப் பல நாட்கள் பல இடங்களிலும் சுற்றி அலைந்தான். ஒரு நாள் பாலைவனத்து வழியே போக நேர்ந்தபோது ஓரிடத்தில் மூன்று இளைஞர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான். சச்சரவின் காரணத்தைக் கேட்ட முகம்மதிடம் அவர்கள் கூறினார்கள்: ''நாங்கள் பிதாபாத் நகரில் உள்ள மாலிக் என்ற பெரிய வியாபாரியின் பிள்ளைகள். எங்கள் தகப்பனார் இறந்துவிட்டார். அவருடைய செல்வம் அனைத்தையும் நாங்கள் செலவு செய்து அழித்துவிட்டோம். மிஞ்சியிருப்பது மூன்றே மூன்று மந்திரப் பொருள்கள்தான். இவைகளில் யார் எதை எடுத்துக் கொள்ளுவது என்பதில்தான் இப்போது சண்டை.''

தன் அன்னையை ஏமாற்றி வஞ்சித்துத் தன்னையும் தன் சகோதரனையும் கொல்ல எண்ணிய வியாபாரி மாலிக்கின் புதல்வர்கள்தான் இம்மூவரும் என்பதைப் புரிந்து கொண்ட முகம்மது, ''நான் ஒரு புகழ்பெற்ற நீதிபதி. ஆகவே உங்களுக்கு என்னால் நேர்மையான முறையில் முடிவு கூறமுடியும். சர்ச்சைக்குரிய பொருள்களின் விசேஷமென்ன, அதைக் கூறுங்கள்'' என்றான்.

''இதோ இந்தப் பைக்குள் கையை விட்டு என்ன வேண்டும் என்று நினைக்கிறோமோ அது உடனே இதனுள் கிடைக்கும்'' என்றான் மூத்த மகன்.

''இந்தக் கம்பளத்தின் மீது உட்கார்ந்து கொண்டு போகவேண்டிய இடத்தைக் கூறி அங்கு கொண்டு போகும்படி ஆணையிட்டால் இந்த மந்திரக் கம்பளம் அவர்களை அங்கு கொண்டு போய் விட்டு விடும். இதன் மகிமை இதுதான்'' என்றான் இரண்டாமவன்.



''இந்தக் குப்பியில் உள்ள தைலத்தைப் புருவத்தில் தடவிக் கொண்டால் உங்கள் உருவம் பிறர் பார்வைக்குப் புலப்படாமல் மறைந்து போகும். நம் இஷ்டப்படி எங்கும் போகலாம்'' என்ற மூன்றாமவன் ''கனம் நீதிபதியவர்களே! இவைகளில் யார் எப்பொருளை எடுத்துக் கொள்வது என்று அறிவாளியான உங்கள் தீர்ப்பை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம்'' என்றான்.

''இது ரொம்பச் சுலபமான விஷயம்'' என்ற முகம்மது ''இதோ என்னுடைய வில். நான் இதில் ஓர் அம்பை வைத்துப் பாலைவனத்தில் விடுகிறேன். நீங்கள் இந்த அம்பு போய் விழும் இடத்துக்கு ஓடி அதை எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் தரவேண்டும். உங்களில் யார் முதலில் அம்புடன் வருகிறார்களோ அவர்களுக்கே இந்த மூன்று அற்புதப் பொருள்களையும் அளித்து விடுகிறேன்'' என்று கூறி அம் மூன்று மந்திரப் பொருள்களையும் அவர்களிடமிருந்து தான் வாங்கி வைத்துக்கொண்டு வில்லிலே நாணைப் பூட்டினான். முகம்மதுவின் முடிவை மூவருமே திருப்தியுடன் ஏற்றுக் கொண்டனர். வில்லிலிருந்து அம்பு புறப்பட்டதும் அம்மூவருமே அம்பு போல் அதைப் பின்பற்றிப் பாய்ந்து ஓடலானார்கள். அப்படி அவர்கள் ஓடுவதைத்தானே முகம்மது எதிர்பார்த்திருந்தான்!

மந்திரப் பையையும், எண்ணெயுள்ள குடுவையையும் எடுத்துக்கொண்டு மந்திரக் கம்பளத்தின் மீது அமர்ந்து கொண்ட முகம்மது அழகியின் கோட்டைக்குப் போகும்படி ஆணையிட்டான். கோட்டைப் பகுதிக்குப் போனதும் மந்திரப் பொருள்களை ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டுப் பறக்கும் கம்பளத்துடன் கோட்டை வாசலுக்குப் போனான். தன் வரவை அழகிக்கு அறிவிக்கும்படி கூறினான்.

சற்றைக்கெல்லாம் முகம்மது அழகியின் முன்னால் அழைத்துச் செல்லப்பட்டான்.

''ஓ! மறுபடியும் வந்திருக்கிறாயா?'' என்றாள் அழகி அழகாகச் சிரித்தபடி.

''உனக்கு ஓர் அற்புதமான புதையலைக் கொண்டு வந்துள்ளேன். நீ என்னுடன் மலையடிவாரத்துக்கு வருவாயானால் அதை உனக்குக் காட்டுவேன்'' என்றான் முகம்மது.

அழகிக்கு ஆவல் பிறந்தது. முகமதுடன் மலையடிவாரத்துக்கு வந்தாள். அதிசயப் பொருட்களை எடுத்துக் கொண்டு அவளுடன் மந்திரக் கம்பளத்தில் அமர்ந்து, ''கடலுக்கு நடுவிலுள்ள பூதத் தீவுக்குப் போ'' என்று கட்டளையிட்டான்.

நீண்ட நாள் பிரயாணத்துக்குப் பிறகு இருவரும் பூதத் தீவுக்கு வந்தார்கள். அழகியை முகமது மணந்து கொண்டான். யாருமற்ற அத்தீவில் அவ்விருவரும் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் முகம்மது மந்திரப் பைக்குள் கையை விட்டுக் கேட்டு வரவழைத்துக் கொண்டான்.


ஒரு நாள் அழகி முகம்மதிடம் கொஞ்சியபடியே ''நான் உங்களுடையவளாகி விட்டேன். இன்னுமா என்னிடம் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை? உங்களிடமுள்ள அதிசயப் பொருள்களைப் பற்றி எனக்குத் தெரிவிக்கக் கூடாதா?'' என்று கேட்டாள். அவளுடைய பசப்பு மொழிகளில் மதி இழந்துபோன முகம்மது தன்னிடம் உள்ள மந்திரப்

உண்மை, உண்மை!

○ 'புல்டாக்' என்று ஒரு வகைக் காவல் நாயைப் படங்களில் பார்த்திருப்பீர்கள். பார்க்கவே பயங்கரமாக இருக்கும் அதன் முகத் தோற்றம். ஆனால் இதன் குணமோ தோற்றத்துக்கு நேர் மாறானது. நிர்ப்பந்தம் ஏற்பட்டாலொழியச் சண்டை இடாது. மற்ற எல்லா வகை நாய்களையும் விடக் குழந்தைகள் பயமின்றிப் பழகுவதற்கான அமைதியான சுபாவம் கொண்டது இந்த 'புல்டாக்'குகள்.



○ ''க்வாக்... க்வாக்.... க்வாக்...'' வாத்து கத்துகிறது என்று உடனே உன் தம்பிப் பாப்பா கூடச் சொல்லி விடும். ஆனால் எல்லா வாத்துக்களுமே ஒலி எழுப்புவதில்லை. வாத்துக்களில் எத்தனையோ வகைகள் உண்டு. இவைகளில் கருப்பு வாத்தும் மல்லார்டுஎன்ற வகை வாத்துக்களுமே 'க்வாக்', 'க்வாக்' ஒலி எழுப்புகின்றன. மற்றவை இவ்விதம் ஒலி எழுப்புவதில்லை.





வாடா மலர்

அதிகமாகப் பேசுவோர் செயல் புரிவதில்லை. - மாஜினி

* * *

தாய் உன்னைப் பத்து மாதங்கள் சுமந்தவள். மூன்று ஆண்டுகள் பால் கொடுத்து வளர்த்தவள். உனக்கு எல்லாம் அவள்தான். அவள் உன்னைப் பற்றி ஆண்டவனிடம் முறையிடும்படி நடந்துவிடாதே. - எகிப்திய பழமொழி.

பொருள்களின் குணங்களைப் பற்றிக் கூறிவிட்டான்.

முகம்மதுக்கு மனைவியான போதிலும் அந்த அழகியின் கெட்ட குணம் மாறவில்லை. முகமது ஏமாந்தபோது பொருள்களுடன் மந்திரக் கம்பளத்தில் ஏறித் தன்னுடைய கோட்டைக்குப் போய்விட்டாள்.

ஆகாயத்திலே பறந்து செல்லும் தன் அழகு மனைவியைக் கண்ட பிறகே தான் வஞ்சிக்கப்பட்டதை அறிந்த முகம்மது தலையைத் தரையில் மோதிக் கொண்டு அழுதான், புலம்பினான். 'இங்கிருந்து எப்படி வெளியேறுவேன்? உயிர் வாழ உணவுகூட இல்லையே' என்று கதறினான். கண்ணீர் உலரக் களைத்துப் போய் அப்படியே தூங்கிப் போனான்.

கண் விழித்தபோது ஒரு மரத்தின் மீது இரு புறாக்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டான். கண் விழித்தாலும் எழுந்திருக்கவில்லை முகம்மது. புறாக்களோ மனித பாஷையிலேயே பேசின.

''இதோ இங்கு படுத்திருக்கும் மனிதனைத் தெரியுமா உனக்கு?''

''தெரியாதே...''

''இவன் பெயர் முகம்மது. தனது மனைவியினால் வஞ்சிக்கப் பட்டவன். இனி இவன் நிலை என்ன தெரியுமா?''

''தெரியாதே...''

''இவன் கண்விழித்து நான் சொல்வதைக் கேட்பானானால் பிழைக்க முடியும்.''

''நான் விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன், அருமைப் பறவையே! ஆண்டவனின் பெயரால் கேட்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும் சொல்'' என்று கேட்டபடி எழுந்து உட்கார்ந்தான் முகம்மது.

''இதோ இந்த மரத்தின் பட்டைகளை எடுத்துக் காலில் கட்டிக் கொண்டு நீரின் மீது நடந்தாயானால் நீர் விலகாது. பூமியின் மேல் நடப்பது போல் நடந்து போகலாம். மூழ்க மாட்டாய். இம்மரத்தின் ஒரு கிளையை ஒடித்துக் கொள். அதனால் ''ஹாஷ்!'' என்று கூறி யாரை அடித்தாலும் அவர்கள் அடுத்த விநாடியே கழுதையாக மாறி விடுவார்கள். மறுபடியும் ''ஆதம்'' என்று கூறி அடித்தால் பழைய உருவை அடைந்து விடுவார்கள். கடைசியாக இம்மரத்தின் இலைகளில் கொஞ்சம் பறித்துக்கொள். இந்த இலைகளைப் பார்வை இழந்தவர்களின் கண்களில் வைத்துக் கட்டினால் அவர்களுக்குப் பார்வை திரும்ப வரும்'' என்று கூறிப் புறாக்கள் பறந்து சென்றன.

முகம்மது இதன் பிறகும் சும்மா உட்கார்ந்திருப்பானா? பறவைகள் சொற்படியெல்லாம் நடந்து கொண்டான். நேரே முதலில் கோட்டையில் உள்ள அழகியான தன் மனைவியிடம் போனான். திரும்பிவிட்ட கணவனைக் கண்ட அவள் கோபத்துடன் தன் ஆட்களைக் கூப்பிட்டு, ''இவனை இங்கிருந்து விரட்டியடியுங்கள்'' என்று ஆணையிட்டாள். அடிக்க வந்த ஆட்களை முகம்மது தன்னிடமிருந்த மந்திர மரத்தின் குச்சியால் தட்டவே அவ்வளவு பேரும் கழுதையாக மாறிக் குரல் எழுப்பினார்கள். பிறகு முகம்மது சுலபமாகக் கோட்டையினுள் நுழைந்து தன் மனைவியான அந்த அகம்பாவம்பிடித்த அழகியையும் குச்சியால் அடித்து 'ஹாஷ்' என்றான். அடுத்த விநாடி அவள் அழகிய கழுதையாக மாறினாள். அவள் முதுகில் இரு கூடைகளைக் கட்டி அதில் கல்லையும் மண்ணையும் நிரப்பி அதைச் சுமக்கும்படி விரட்டி விரட்டி

அடித்தான் முகம்மது. இருட்டும் வேளையில் லாயத்தில் கொண்டு போய்க் கட்டி மக்கிப்போன வைக்கோலை அதன் முன் போட்டான். கழுதையான அழகி தொங்கிய தலையுடன் கண்ணீர் வழிய நின்றாள்.

''என் மந்திரப் பொருட்களை எங்கு வைத்திருக்கிறாய்? அவைகளை அடையும்வரையில், உன்னை இந்த நிலையி லிருந்து மாற்ற மாட்டேன்'' என்றான் முகம்மது. பாவம். கழுதை மௌன மாகக் கண்ணீர் வடித்தது. அதன் கழுத்தில் மந்திரப் பறவையின் கால் களைக் கொண்ட தாயத்து தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட முகம்மது அதைக் கழற்றிக் கொண்டான். பிறகு அவள் நிலைக்கு இரங்கி மந்திரக் குச்சியினால் அவளைத் தட்டிப் பழைய படி அவளைப் பெண்ணாக்கினான். முன்னை விட அழகாக ஆனால் ஆணவம் அடங் கிப் போனவளாக அவன் கால்களில் விழுந்து ''இனி நான் எவ்வித சூழ்ச்சி யும் செய்ய மாட்டேன். என்னை உங்கள் மனைவியாக ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று கெஞ்சினாள். முகம்மது அவளை அணைத்துக் கொண்டான். இருவரும் சந்தோஷமாகக் கோட்டையில் வாழ்ந்து வரலானார்கள்.

ஒரு நாள் கோட்டைக்கு ஒரு தூது வன் வந்தான். அவன் அடுத்த ராஜ் யத்தின் மன்னனிடமிருந்து வந்திருந் தான். அந்த மன்னர் யார்? முகம்மது வின் சகோதரன் அகமதுதான். மந்திரப் பறவையின் தலை அகமதை அரசனாக்கி யிருந்தது. முகம்மதும் அவன் மனைவியும் அகமதின் அரண்மனைக்குச் சென்றார்கள். ஆனந்தக் கண்ணீர் வழிய அகமது தன் சகோதரனை இரு கைநீட்டி வரவேற்று அழைத்துக் கொண்டான்.

''சகோதரனே! இந்த வேளையில் நம் பெற்றோர் இங்கு இருப்பார்களே யானால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக் கும்'' என்றான் முகம்மது. உடனே ஆட்கள் அனுப்பப்பட்டனர். விரைவி லேயே குருட்டு விறகுவெட்டியையும் அவன் மனைவியான குருடியையும் அரசவையில் கொண்டு வந்து நிறுத்தி னார்கள்.

முகம்மது தன்னிடமிருந்த மந்திர இலையை அவர்களின் கண்களில் வைத்துக் கட்ட இருவருக்கும் கண் பார்வை திரும்பியது.

தந்தையும் தாயும் தம் இரு புதல் வர்களையும் கட்டி முத்தமிட்டார்கள். எல்லோரும் நீண்ட நெடுங்காலம் சந் தோஷமாக வாழ்ந்து வந்தார்கள்.

வசைச்சொல் வந்தவழியே திரும்பும்



ஓர் ஊரில் ஒரு பணக்காரன் வசித்து வந்தான். அவன் மிகவும் கஞ்சன். கருமி. யாருக்கும் ஒன்றும் தரமாட்டான். தப்பித் தவறி யாராவது ஒரு பிச்சைக்காரன் அவன் மாளிகையின் வாயிலுக்குச் சென்றால் அவன் கடுமையாகத் திட்டிக் கொண்டே தடியால் அடித்துத் துரத்தி விடுவான். அவ்வளவு கொடுமைக்காரன் அவன்.

ஒருமுறை பகவான் புத்தர் அந்நகருக்கு வந்தார். அவர் அந்தப் பணக்காரனது மாளிகைக்குச் சென்று பிச்சைகேட்டார். பணக்காரன் உடனே கோபத்தோடு கத்தினான். ''போ, இங்கிருந்து உடனே போய்விடு!''

ஆனால் புத்தர் அமைதியோடு நின்றிருந்தார். இதனால் கோபம் அதிகரித்த பணக்காரன் புத்தரை வாயில் வந்தபடியெல்லாம் திட்டினான். அப்படியும் புத்தர் ஒரு வார்த்தைகூடப்பேசாமல் அமைதியாயிருந்தார். வசைமாரி பொழிந்த அவன் கடைசியில் களைத்துப் போனான். இப்பொழுது அவனுக்குக் கோபத்துக்குப் பதில் ஆச்சரியம் தான் வந்தது. 'இவன் சாதாரணப் பிச்சைக்காரனாக இருந்தால் இதற்குள் நாம் திட்டியது பொறுக்காமல் ஓடியிருப்பான். அல்லது நம்மை எதிர்த்து நாலு வார்த்தையாவது பேசியிருப்பான். ஆகவே இவன் பிச்சைக்காரன் அல்ல. வேறு யாரோ ஒரு மகான்' என்ற முடிவுக்கு வந்தான்.

உடனே. அவன் மனத்தில் பயத்தோடு கூடிய மரியாதை பிறந்தது. அவன் அவர் காலடியில் விழுந்து. ''ஐயா, தங்களைப் பார்த்தால் சாதாரணப் பிச்சைக்காரனைப் போல் தோன்றவில்லை. நான் இத்தனை தூரம் தங்களை ஏசிப் பேசியும் தாங்கள் கோபமடையவில்லையே? ஐயா, பெரியவரே! நான் திட்டியதையெல்லாம் மறந்து என்னை மன்னித்து விடுங்கள். தயவுசெய்து தாங்கள் யாரென்பதைக் கூறுவீர்களா? தங்களால் எப்படி இவ்வளவு திட்டுக்களையும் அவமானத்தையும் பொறுத்துக் கொள்ள முடிந்தது? தாங்கள் ஏன் என்மேல் கொஞ்சமும் கோபப்படவில்லை?'' என்று கேட்டான்.

சரோஜா ரங்கராஜன்

அதற்குப் புத்தர் மறுமொழி கூறினார்: ''சகோதரா! உன்னிடம் ஒரு பசு இருக்கிறதென்று நினைத்துக்கொள். அதை நீ எனக்குத் தானமாகத் தருகிறாய். ஆனால் நான் அதை வாங்கிக் கொள்ளவில்லையென்றால் அப்பசு யாருக்குச் சொந்தம்?''


உடனே பணக்காரன், ''தாங்கள் வாங்கிக் கொள்ளவில்லையென்றால் பசு எனக்குத்தான் சொந்தம்'' என்று சொன்னான்.

புத்தர் சொன்னார்: ''அதைப் போல் நீ எவ்வளவுதான் என்னைக் கடுமையான வார்த்தைகளால் திட்டியபோதிலும் நான் அத்திட்டுக்களை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகையால் நீ திட்டிய திட்டுக்கள் அனைத்தும் உன்னிடமே சேர்ந்துவிட்டன!'' என்று அமைதியோடு சொன்னார்.

இதைக் கேட்ட பணக்காரன் வெட்கத்தினால் தலைகுனிந்தான். அவர் மகான் புத்தர் என்பதை அறிந்தான். அவன் அகங்காரமும் அஞ்ஞானமும் அக்கணமே விலகின, உடனே அவர் காலடியில் விழுந்து தன் அறியாமையை மன்னிக்கும்படி வேண்டினான். தான் செய்த தவறுகளுக்குப் பிராயச்சித்தமாகத் தன் சொத்துக்களையும் மாளிகையையும் புத்தருக்குக் காணிக்கையாக்கிக் கொடுத்துத் தானும் புத்த மதத்தில் சேர்ந்து சந்நியாசியானான்.



எறும்பின் பேச்சு




தி. பட்சிராஜன்


சின்னத் தம்பி தங்கையரே
சிரித்து வாழ வழியொன்று
சொன்னால் கேட்டு நடப்பீரோ?
சுகமே காணப் பெறுவீரோ!

உம்மைப் படைத்த இறைவன்தான்
உருவில் சிறிய உயிராக
எம்மைப் படைத்து உலகிலிட்டான்
எறும்பு என்றே பெயருமிட்டான்

இன்பம் துன்பம் யாவினுமே
இணைந்தே நாங்கள் வாழ்வோமே
தன்னந் தனியாய்ப் பிரியோமே
தவித்துப் போவோம் பிரிந்தாலே



ஓடி யாடிக் கட்டியே
ஒன்றாய் வாழ்வோம் புற்றிலே
கூடிக் கட்டிய கோபுரம்
குடும்ப வாழ்வின் ஆலயம்



சின்னக் கையும் காலும்தான்
சிறிய உடலும் கண்ணும்தான்
எனினும் நாங்கள் உழைப்பாலே
எய்திடும் நன்மை பலவாமே

எறும்பு ஊரக் கற்குழியும்
என்று சொல்ல அறிவீரே
விரும்பி நாளும் முயன்றாலே
வெற்றி உறுதி திண்ணமே.

வேலை நிறுத்தம் கதவடைப்பு
வெட்டிப் பேச்சு வீண்வாதம்
காலை மாலை போராட்டம்
கடுகும் இல்லா வாழ்வாமே.

எங்கள் வாழ்வைக் காண்பீரே
ஏற்றம் பெற்று மகிழ்வீரே.
மங்கா உழைப்பும் ஒற்றுமையும்
வாழ்வில் சொரிந்திடும் வளத்தினையே!

மன்னிப்பு

எஸ். ஆர். சின்னமணி



பள்ளி செல்லப் பயந்தசிறு
பையன் ஒருநாள் காலையிலே
துள்ளி ஓடி நுழைந்திட்டான்
தோட்டம் ஒன்றில் ஒளிந்திட்டான்.

தந்தை சொல்லும் கேளாமல்
தாயின் அன்பும் ஏற்காமல்
வந்து தனியே தோட்டத்தில்
வாடிச் சோர்ந்து நின்றிட்டான்

பூக்களில் எல்லாம் தேனீக்கள்
போயே மொய்த்துத் தேனெடுத்து
தேக்கி அடையில் வைத்தனவே
தெம்பாய்ப் பறந்து திரிந்தனவே!

பறவை இனங்கள் கூடுகளைப்
படைத்திடச் சுள்ளி பொறுக்கினது.
தரையில் ஊரும் எறும்பினங்கள்
தானிய மணிகள் சேர்த்ததுவும்


சின்னஞ் சிறிய கரையான்கள்
சேர்ந்து புற்றை எழுப்பினதும்
தன்னந் தனியே தரையினிலே
தம்பியும் பார்த்து நின்றிருந்தான்.

மலர்கள் பூத்து மணப்பதுபோல்
மரங்கனி பழுத்துச் சொரிகிறது
நிலத்தில் உயிரின மத்தனையும்
நித்தம் கடமை புரிகிறது.

இளமையில் சோம்பித் திரிந்திட்டால்
எதிர்வரும் வாழ்வு என்னாகும்?
தெளிந்த அறிவைப் பெற்றிடவே
தினமும் பள்ளி சென்றிடுவேன்.

எவரும் தேடி வருமுன்னே
இப்போ போவேன் வீட்டிற்கு
தவறை உணர்ந்து திருந்திட்டேன்
தாயிடம் கேட்பேன் மன்னிப்பு.







பாம்பு முட்டையிடுமா ?


நம்மில் பலருக்குப் பாம்பு என்பது கொடிய ஐந்து என்பதைத் தவிர அதைப் பற்றி அதிகமாக ஒன்றும் தெரியாது. பாம்புகளுள் பல வகை உண்டு என்பது தெரிந்தாலும் அவைகளுக்கிடையேயுள்ள வித்தியாசங்களைப் பற்றித் தெரியாது. பொதுவாகப் பாம்புகள் முட்டை யிடும் என்றுதான் அறிந்திருப்பீர்கள். பாம்புகளில் பல வகை — கிலுகிலுப்பைப் பாம்பு, தாமிரத் தலையன், நீர்ப் பாம்புகள் முதலியவை முட்டையிடுவதில்லை. தன்னைப் போன்ற குட்டிகளையே பெறுகின்றன. சில வகைப் பாம்புகள் குறைவான குட்டிகளையும் சில வகை ஒரு தடவைக்கு 75க்கும் அதிகமான குட்டிகளையும் போடக் கூடியவை. ஆனாலும் பாம்புகளில் முட்டையிடும் வகைதான் அதிகம். மறைவான இடங்களில்— பாறை அல்லது மர இடுக்கு, குறுகலான இடைவெளி ஆகிய இடங்களில் பாம்புகள் முட்டையிடும். இதன் முட்டைகள் தோற்றத்தில் கோழி முட்டை போலிருக்காது. நீளவாட்டிலும் சிறியதாகவும் இருக்கும். சில வகைப் பாம்புகளின் முட்டைகள் தான் கோழி முட்டையின் அளவுக்குப் பெரிதாக இருக்கும். பாம்பு முட்டைகளின் ஓடு உறுதியாகவும் அதே சமயத்தில் பதப்படுத்திய தோலைப்போல் மிருதுவாகவும் இருக்கும். இனத்துக்கு இனம் முட்டைகளின் எண்ணிக்கை மாறுபட்டிருக்கும். மலைப் பாம்புகள் தான் அதிக முட்டைகள் இடும். ஒரு தடவைக்கு இந்திய மலைப் பாம்பு 107 முட்டைகள் இடுமாம். பாம்பு முட்டைகள் சூரிய வெப்பத்ினாலும் மக்கும் குப்பை கூளங்களிலிருந்து வெளிப்படும் உஷ்ணத்தினாலும் பொரிகின்றன. சில வேளைகளில் பாம்புகள் அவற்றின் முட்டைகளைச் சுற்றிக்கொண்டு படுத்திருப்பதையும் காணலாம்.

நூற்றுக் கணக்கில் முட்டைகளிடும் போது அவற்றிலிருந்து வெளிப்படும் குட்டிப் பாம்புகளைப் பராமரிப்பது யார், எப்படி? முட்டையிலிருந்து வெளிப்பட்ட விநாடி முதலே குட்டிப் பாம்புகள் தங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்.

...ஞ்சுக்கோ ✖ தெரிஞ்சுக்கோ ✖ தெரிஞ்சுக்கோ ✖ தெரிஞ்சுக்கோ ✖ தெரிஞ்சுக்கோ ✖ தெரிஞ்சுக்கோ ✖ தெரிஞ்சுக்...

கடலில் வாழும் பசுவுக்கு மானட்டீ (Manetee) என்று பெயர். ஒரு சிறிய திமிங்கிலத்தைப் போலிருக்கும் இந்தக் கடல் பசுக்கள். இது மீன் இனமல்ல. இது ஒரு மம்மல். அமெரிக்கக் கடல் பசுக்கள் ஃப்ளாரிடா, மெக்ஸிகோ, மத்திய அமெரிக்கா ஆகிய இடங்களிலுள்ள பெரிய நதிகளிலும் மேற்கிந்தியத் தீவுகளிலும் காணப்படுகின்றன. பரந்த கடலில் வாழ்வதில்லை. ஒன்பதிலிருந்து பதின்மூன்று அடி நீளம் இருக்கும். உடல் ஒரு வகையில் மீனினுடையது போலிருக்கும். ஆனால் இதன் வால் முற்றிலும் மாறுபட்டது. அகலமாகவும் மண் வாரியைப் போல் படுக்கைக் கோட்டு நிலையிலும் உருண்டையான முனைகளோடும் காணப்படும். ரோமமற்ற கெட்டியான தோல். மேலுதட்டில் மட்டும் மீசை போன்ற ரோமம் இருக்கும். உணவு தேடாத நிலையில் நீர் நிலையின் அடிமட்டத்துக்குப் போய் ஓய்வு எடுத்துக் கொள்ளும். உடலை வில்போல் வளைத்து, தலையும் வாலும் நீருக்குள்ளும் முதுகுப் பாகம் மட்டும் நீருக்கு மேலாக இருக்கும்படியும் மிதந்து கொண்டிருக்கும். நீர்த் தாவரங்களே இதன் ஆகாரம். நீர்நிலைகளிலுள்ள தாவரங்களை மேய்வதனால் இதைக் கடல் பசு என்றும் அழைக்கிறார்கள். ஃபிளிப்பர் என்ற கை போன்ற அவயவத்தினால் உணவை வாய்க்குள் தள்ளும். மானட்டீ ஒரு நாளைக்கு 60 முதல் 100 பவுண்டு எடையுள்ள உணவை உட்கொள்ளும். நன்கு வளர்ந்த மானட்டீ 1500 பவுண்டுகள் நிறையுள்ளதாக இருக்கும்.

அனேகமாக மானட்டீ ஒரு குட்டி தான் போடும். சில வேளைகளில் இரட்டையாகவும் பிறப்பதுண்டு. தாய் மானட்டீ தன் குட்டிகளுக்குப் பால் ஊட்ட நீர் மட்டத்துக்கு வந்து, தலையையும் தோள்களையும் நீருக்கு மேலே உயர்த்திக் கொண்டு ஃபிளிப்பர்களினால் குட்டியை மார்போடு அணைத்தபடி பால் கொடுக்கும்.



கடல் பசு


தெரிஞ்சுக்கோ ✖ தெரிஞ்சுக்கோ ✖ தெரிஞ்சுக்கோ ✖

ரேடியோ டெலஸ்கோப்


தெரிஞ்சுக்கோ ✖ தெரிஞ்சுக்கோ ✖ தெரிஞ்சுக்கோ ✖

டெலஸ்கோப்—தூரதரிசினி—இதை முதன் முதலில் கண்டவர் மூக்குக் கண்ணாடித் தயாரிப்பாளரான ஹான்ஸ் லெப்பர்ஸே என்பவர். இவர் ஒரு டச்சுக்காரர். இதற்கும் முன்பே பதின் மூன்றாம் நூற்றாண்டிலேயே விஞ்ஞானிகள் பொருள்களைப் பெரிதாக்கிக் காட்டும் லென்ஸ்களில் சோதனைகள் நடத்தி வந்திருக்கிறார்கள். ஆனால் லெப்பர்ஸேதான் தூரதரிசினியைத் தயாரித்தவர். பாவம், இவர் தம் கண்டுபிடிப்புக்கு உரிமைப் பதிவு செய்து கொள்ளவில்லை. புகழ்பெற்ற வான ஆராய்ச்சியாளரான காலிலியோ லெப்பர்ஸேயின் கண்டுபிடிப்பைப் பற்றிக் கேள்விப்பட்டு அதேமாதிரி தாமும் ஒன்று தயாரித்து முதல் தூரதரிசினி தயாரித்தவர் என்ற பெருமையைப் பெற்றார். காலிலியோ தயாரித்த தூரதரிசினி மிக மிகச் சாதாரணமானது. ஒரு பொருளை அவருடைய சாதனத்தினால் 33 மடங்குதான் பெரிதாக்கிக் காட்ட முடியும். மிகக் குறைந்த—சந்திரனில் கால் பாகத்தை—பரப்பை மட்டுமே காண முடியும். ஆனால் அந்த எளிய கருவியை வைத்துக் கொண்டே அவர் விண்வெளியில் பல அரிய செய்திகளைக் கண்டு கூறினார்.

காலிலியோவுக்குப் பிறகு தூரதரிசினியில் மகத்தான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எலெக்ட்ரானிக் சாதனம் தோன்றிய பிறகு ரேடியோ டெலஸ்கோப்பும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகே ரேடியோ டெலஸ்கோப் முன்னேற்றம் அடைந்தது. இது ஒரு ராட்சசக் கண். நட்சத்திரங்கள் உமிழும் ஒளியை நாம் காண்பதுபோல, அவை வெளிப்படுத்தும் ரேடியோ அலைகளை இந்தச் சாதனத்தால் அறிய—கிரகிக்க முடிகிறது. இந்த டெலஸ்கோப்பின் கண்ணாடி என்பது மிகப் பெரிய கிண்ணம் போன்ற அமைப்பிலுள்ளது. பல அடிகள் குறுக்களவுள்ள ஒரு ரிஃப்ளக்டர் (Radio Reflector). சாதாரண தூரதரிசினியை விடப் பல மடங்கும் பல வழிகளிலும் பயனுடையது ரேடியோ டெலஸ்கோப். நம் கண்ணினாலோ அல்லது சாதாரண டெலஸ்கோப்பினாலோ காண முடியாத எத்தனையோ நட்சத்திரங்கள் உள்ளன. ஆனால் இத்தகைய நட்சத்திரங்கள் ரேடியோ அலைகளை அனுப்பிக்கொண்டிருக்கும். இந்தகைய அலைகளை ரேடியோ டெலஸ்கோப் மூலம் உணர முடியும். பரந்து கிடக்கும் விண்வெளியில் நிறைந்திருக்கும் காஸ்மிக் கதிர்களையும் வாயுக்களையும் கூட ஊடுருவிச் செல்லக் கூடிய சக்தி ரேடியோ டெலஸ்கோப்புக்கு உண்டு. அது மட்டுமல்ல; விண்வெளி ஆராய்ச்சியாளர் எந்த வானிலையிலும் இதைக் கொண்டு விண்வெளியை ஆராய முடியும். பூமிக்கு மேலுள்ள மேகக் கூட்டங்களின் வழியாக ரேடியோ அலைகள் செல்லுவதில் எவ்விதக் கஷ்டமும் கிடையாது.



விண்வெளியின் எல்லாத் திசைகளுக்கும் திருப்பி ஆராயக் கூடிய மிகப் பெரிய ரேடியோ டெலஸ்கோப், செஷயரிலுள்ள (Cheshire) ஜாட்ரில் பாங்க் (Jodrill Bank) என்னுமிடத்தில் உள்ளது (படம்). இதன் கிண்ண அமைப்பின் குறுக்களவு 250 அடிகள்.


1. ஒரு சமயம் நெருப்புக் கோழி ஒன்று ஏரிக்கரையோரத்திலிருந்த வாத்தினுடைய கூட்டில் போய் ஏதோ நினைவாக முட்டையிட்டு விட்டுப் போய் விட்டது. பிரும்மாண்டமான அந்த முட்டையைப் பார்த்த வாத்துக்கு ஒன்றுமே புரியவில்லை.
2. முட்டைகள் பொரிந்து, குஞ்சுகள் வெளி வந்தன. வாத்துக் குஞ்சுகள் நெருப்புக் கோழிக் குஞ்சை, கழுத்து வலிக்க நிமிர்ந்து பார்த்துக் கொண்டே இருந்தன. நெருப்புக் கோழிக் குஞ்சு கசாப்புக் கடையில் உரித்த கோழி மாதிரி இருந்தது.
3. நெருப்புக் கோழிக் குஞ்சும் வாத்துக்குஞ்சுகளோடு குஷியாகக் குரல் எழுப்பிக் குதிபோட்டபடி ஒய்யார நடை பயின்றது.
4. வாத்துக் குஞ்சுகள் நீந்துவதற்குக் குட்டைக்குப் போயின. சின்னஞ் சிறு குஞ்சுகளான அவை உல்லாசமாக நீருக்குள் முங்கி நீந்தின. குட்டிக் குஞ்சுகளான அவைகளுக்கு அந்த ஆழம் நீந்துவதற்குப் போதுமானதாக இருந்தது. ஆனால் பாவம், நெருப்புக் கோழிக் குஞ்சுக்கோ குட்டை நீர் அதன் கணுக்கால் அளவுகூட வரவில்லை!
5. நெருப்புக் கோழிக் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுத்தன வாத்துக் குஞ்சுகள். தரையிலிருந்தபடி நீருக்குள் பாய்ந்து 'டைவ்' செய்வது எப்படி என்று நெருப்புக் கோழிக் குஞ்சுக்குச் செய்துகாண்பித்தன.
6. பாவம், நெருப்புக் கோழிக் குஞ்சு எத்தனை முயன்றும் அதனால் வாத்துக் குஞ்சுகளைப் போல நீரிலே சாகஸங்கள் புரியும் சாதனைகள் அதற்கு வரவில்லை.
7. நெருப்புக் கோழிக் குஞ்சுக்கு நீரில் வாழ முடியுமா? முடியவில்லை. அதற்கு நீந்தவும் வரவில்லை. பறக்கவும் முடியவில்லை. அதற்கு ஒரே வருத்தம், வேதனை.


8. கடைசியில் நெருப்புக் கோழிக் குஞ்சு கண்ணீரோடு தண்ணீரிலிருந்து விடை பெற்றுக் கொண்டது வாத்துக் குஞ்சுகளிடம். இப்போது எட்டி எட்டி நடைபோட்டு ஒரு பாலைவ:ந்துக்கு வந்து சேர்ந்தது. அடேயப்பா! பா 'வனத்து மணலில் இப்போது அது எத்தனை ஒய்யா ரமாக ஓடுகிறது!
9. நெருப்புக் கோழிக் குஞ்சுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. பரந்து கிடக்கும் பாலைவனத்தில் தினமும் ஐந்து மைல் ஆறு மைல் அலுக்காமல் சலிக்காமல் அரக்கப் பரக்க ஓடியது. அப்படியும் அதற்குக் களைப்போ சலிப்போ ஏற்படவில்லை.
10. ஒருநாள் பாலை வனத்தில் நீல நிறப் பெயிண்ட் டப்பா ஒன்று கிடைத்தது நெருப்புக் கோழிக் குஞ்சுக்கு. அதைக் கண்டதும் ஒரு யோசனை உதித்தது.
11. நீல வண்ணத்தைக் கொண்டு பாலைவனத்திலே ஓர் அழகான ஏரியை வரைந்தது. வாத்துக் குஞ்சுகளோடு விளையாடிய நினைவில் குளுகுளு வர்ணத்தில் குட்டையை தீட்டி விட்டு நின்றிருந்தது அது.
12. அன்று நெருப்புக் கோழிக் குஞ்சைத் தேடி வாத்துக் குஞ்சுகள் பறந்து வந்தன. 'பாவம், இன்னமும் இதற்கு நீரில் இறங்கப் பயம் போலிருக்கிறது. நாம் அதில் போய்க் குதித்துக் காட்டிக் கேலி செய்வோம்!' என்று எண்ணியபடி அந்த ஓவியக் குட்டைக்குள் பாய்ந்தன!
13. அவ்வளவுதான். அடுத்த விநாடி? என்ன ஆகியிருக்கும்? சொல்லுங்கள் பார்க்கலாம், நீர் என்று நினைத்து நீல மணலில் போய் வாத்துக் குஞ்சுகள் பொதுகடீரென்று விழுந்தன! அதுமட்டுமா? கொதிக்கும் பாலைவனத்து மணல் அவற்றின் பாதங்களைக் கொப்புளிக்க வைத்து விட்டன, பாவம்.
14. நெருப்புக் கோழிக் குஞ்சைக் கேலி செய்ய எண்ணிய வாத்துக் குஞ்சுகள் கால் எரிச்சலைத் தணித்துக் கொள்ளக் குட்டையை நோக்கிப் பறந்து விரைந்தன. நெருப்புக் கோழிக் குஞ்சோ காலை வீசிப் போட்டுப் பாலைவனத்து மணலிலே படு குஷியாக நடந்து கொண்டிருந்தது. அது அது அதனதன் இடத்தில் இருப்பதுதான் இன்பம் இல்லையா?

"பிறந்த நாள் பரிசு"

பாலம் சுந்தரேசன்

மறுநாள் நளினியின் பிறந்த தினம். நளினியின் அம்மாவுக்குத் தன் ஒரே மகளின் பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாட வேண்டும் என்று ஆசை. நளினியோ ''பர்த்டே பார்ட்டி'' வைக்க வேண்டும் என்று துடித்தாள். நளினியின் அப்பா நல்ல பணக்காரர். ஆயினும் பணத்தை வீணாகச் செலவழிப்பது என்றால் அவருக்கு வேப்பங்காய் சாப்பிடுவதுபோல் இருக்கும்.

''பர்த்டே கொண்டாடுவது, பார்ட்டி எல்லாமே ஒரு வீணான செலவு'' என்றார் அப்பா.

''என் கிளாஸ்மேட் எல்லாரும் எப்படிக் கொண்டாடுகிறார்கள் தெரியுமா? ரூபாவின் 'பர்த்டே'க்கு அவள் அப்பா ஒரு ஃபாரின் — ரிஸ்ட்வாட்ச் — வாங்கிக் கொடுத்திருக்கிறார்'' என்று மனக் குறையுடன் கூறினாள் நளினி.

''ஆமாம், உனக்குச் சொல்ல வந்து விட்டாயே, நானே இன்னும் இந்தப் பழைய காலத்து வாட்சைப் பதினைந்து வருஷங்களாகப் போட்டுக் கொண்டிருக்கிறேன். நல்லதாக ஃபாஷனாக ஒன்று வாங்கித் தர அப்பாவுக்கு மனம் வரவில்லை. ஒரொருத்தர் எத்தனை மாடர்னை எல்லாம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். உம், எல்லாத்துக்கும் கொடுத்து வைத்திருக்கணும்'' — இது அம்மாவின் குறை.

''ஏய்! என்ன நீபாட்டுக்குப் பேசிக் கொண்டே போகிறாய். உன் கடிகாரமாவது சரியாக ஓடிக்கிட்டு இருக்கே, நான் உங்க அப்பா நம்ப கல்யாணத்தின் போது வாங்கித் தந்த கடிகாரத்தைப் போட்டுக்கிட்டுக் காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கிறேனாக்கும். ஆமாம், நிஜமாகக் காலத்தைத் தள்ளத்தான் வேண்டியிருக்கிறது. அது நினைத்துக் கொண்டால் நின்று போய்விடுகிறது'' என்று பலமாகச் சிரித்தார் நளினியின் அப்பா.

''போருமே, உங்க ஜோக். இதோ பாருங்க, ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் நான் இந்தக் கடிகாரத்தைத் தூக்கி எறியத்தான் போகிறேன்'' என்றாள் அம்மா கோபமாக.

''அம்மா! நான் ஒரு நாள் உன் கடிகாரத்தை ஒளித்து வைத்து விடுகிறேன். அப்பா உனக்குப் புதிது வாங்கிக் கொடுத்து விடுவார்'' என்றாள் நளினி.

''ஏன், நம்ப ரங்கசாமியை விட்டு 'பிக்பாக்கெட்' அடிக்கச் சொல்லுங்களேன்'' என்று புலமாகச் சிரித்தார் அப்பா.

ரங்கசாமி நளினி வீட்டுச் சமையல்காரன். அவன் மாஜி ''பிக்பாக்கட்'' ஆசாமி. ஒரு சமயம் நளினியின் அப்பாவின் பாக்கெட்டில் அவன் கைவிட்ட போது, எப்போதும் பர்ஸும் பணமுமே ஞாபகமாக உள்ள நளினியின் அப்பா அவனைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டார். 'இனித் திருடுவதில்லை' என்று அவன் சத்தியம் செய்யவே அவனைத் தம்மிடமே வேலைக்கு வைத்துக் கொண்டார் நளினியின் அப்பா. நன்றாகச் சமைக்கத் தெரிந்த ரங்கசாமி மிகக் குறைந்த சம்பளத்தில் நளினி வீட்டுச் சமையல்காரனாக ஆனான்.

'கடிகாரத்தை எப்படி அப்பா 'பிக்பாக்கெட்' அடிக்க முடியும்? 'பிக்ஹாண்ட்' என்று சொல்லுங்கள்'' என்று நளினி கூறியதும் அப்பா பெரிதாகச் சிரித்தார்.

அப்பா நல்ல 'மூடில்' இருப்பதைப் பார்த்ததும் நளினி, 'பர்த்டே பார்ட்டி' வைக்கலாம்! அப்பா என்று கெஞ்சினாள். அப்பாவும் சம்மதித்து விட்டார். நளினிக்கு ஒரே குதூகலம். தன் சிநேகிதிகளுக்கெல்லாம் சொல்ல விரைந்தாள். அம்மாவும் 'பார்ட்டி'க்கு ஏற்பாடுகளைப் பரபரவென்று செய்ய ஆரம்பித்தாள்.

மறுநாள் மாலை. நளினி வீட்டு முன்ஹால் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. நடுவில் ஒரு மேஜையில் 'பர்த்டே' கேக் பன்னிரண்டு மெழுகுவர்த்திகளுடன் கருத்தைக் கவர்ந்தது. சமையல் அறையில் ரங்கசாமி கேரட் அல்வா, உருளைக்கிழங்கு போண்டா, மிக்சர் எல்லாம் தயாரித்துக் கொண்டிருக்கும் வாசனை மூக்கைத் துளைத்தது. நளினி புத்தம் புதிய 'பெல்பாட்டம்' டிரஸில்

மிக அழகாக விளங்கினள். அம்மா அவளை மிகக் கவனத்துடன் அலங்கரித்திருந்தாள்.

எல்லா ஏற்பாடுகளும முடிந்தன. அம்மா தான் டிரஸ் செய்து கொண்டதும் வழக்கம்போல் கடிகாரத்தை எடுத்துக் கட்டிக் கொள்வதற்காக மேஜை டிராயரைத் திறந்தாள். என்ன ஆச்சரியம்! கடிகாரத்தைக் காணவில்லை.


''நளினி! என் கடிகாரத்தைப் பார்த்தாயா?'' என்று கேட்டாள் அம்மா பரபரப்புடன்.

முப்பதாவது தடவையாகத் தன் அழகைக் கண்ணுடியில் பார்த்து மகிழ்ந்த நளினி, ''இல்லையே அம்மா!'' என்ருள்.

''நேற்று இரவு கழற்றி டிராயரில் வைத்தேன். இப்போது பார்த்தால் காணும்.''

நளினியும் அம்மாவும் வீடு முழுவதும் கடிகாரத்தைத் தேடினர்கள். கிடைக்கவில்லை. ''நேற்றைக்கு அம்மா தூக்கி எறிந்துவிடுவேன் என்று சொன்ஞளே, அப்படியே செய்திருப்பாளோ?'' நளினியின் மனத்தில் இந்த விபரீத சந்தேகம் எழுந்தது. உடனே ''சே,சே, அம்மா அப்படி யெல்லாம் செய்ய மாட்டாள். ஒருவேளை ரங்கசாமி எடுத்திருப்பானே? சே... எத்தனையோ விலே உயர்ந்த சாமான்களை விட்டுவிட்டுக் கேவலம் இந்தப் பழைய கடிகாரத்தை யார் திருடுவார்கள்?'' இப்படியெல்லாம் ஓடியது நளினியின் சிந்தனை ஓட்டம்.

அம்மாவுக்குக் கடிகாரம் தொலைந்தவுடனேயே உற்சாகம் குறைந்து விட்டது. நளினியின் அப்பாவுக்கு ஏதாவது தொலைந்தால் அல்



வது வீணுல் பொல்லாத கோபம் வந்துவிடும். ''இந்த அசடு நளினி நேற்றைக்கு விளையாட்டாக 'ஒளித்து வைத்து விடுவேன்' என்றதே, அதே மாதிரி ஒளித்து வைத்திருக்குமே'' என்று நளினியை வெளிப்படையாகக் கேட்க . அம்மா தயங்கினுள். 'கேட்டால் வருத்தப்படுவாள். பிறந்த நாளன்று அவளை வருத்தப்பட வைக்கக் கூடாது!' இந்தக் கவலையால் நளினியின் தாயினுல் உற்சாகத்துடன் பார்ட்டி ஏற்பாடுகளில் கலந்துகொள்ள முடியவில்லை. நளினிக்கும் உற்சாகம் சிறிது குறைந்து போய் விட்டது.

இதற்குள் நளினியின் சிநேகிதிகள் வர ஆரம்பித்துவிடவே அம்மாவும் நளினியும் அவர்களை வரவேற்றுக் கவனிக்க விரைந்தார்கள். நளினியின் நண்பர்கள் சிலர் பரிசுகள் கொண்டுவந்திருந்தார்கள். சிலர் அழகிய மலர்கள் கொண்டு வந்திருந்தார்கள். தோழிகளைக் கண்டதும் நளினி கடிகாரத்தைப் பற்றி மறந்து விட்டாள். அவர்களுடன் குதூகலத்துடன் பேச ஆரம்பித்தாள்.

வாசலில் கார் சப்தம் கேட்டது நளினியின் அப்பா உள்ளே வந்தார்.

ஹாலில் குழுமியிருந்த எல்லோரையும் ஆச்சரியத்துடன் பார்த்துவிட்டு, ''என்ன இது, என்ன நடக்கிறது இங்கே?'' என்று ஒன்றும் தெரியாதவர்போல் விசாரித்ததும் நளினிக்கு அழுகையே வந்து விட்டது

''என்ன அப்பா இது, இன்றைக்கு என் ''பர்த்டே'. மறந்து விட்டீர்களா?''

''அடடே! உன் பர்த் டேயா? நான் உன் அம்மாவுக்குத்தான் பிறந்த நாள் என்று நினைத்து அவளுக்குப் போய் ஒரு 'பிரஸண்ட்' வாங்கிக்கொண்டு வந்து விட்டேன்'' என்று பலமாகச் சிரித்த அப்பா, ''இந்தா கமலா கையை நீட்டு!'' என்றார்.

ஒன்றும் புரியாத நளினியின் அம்மா கையை நீட்டினுள். கோட் பாக்கெட்டிலிருந்து வண்ணக் காகிதம் சுற்றிய ஒரு பாக்கெட்டை எடுத்த நளினியின் அப்பா அதிலிருந்து மிக அழகிய லேடன்ட் மாடல் ரிஸ்ட் வாட்ச்சை எடுத்து நளினியின் அம்மா கையில் கட்டிவிட்டார். எல்லாக் குழந்தைகளும் கை தட்டினுர்கள். நளினியின் அம்மா சந்தோஷத்தில் திணறினுள்.

''எனக்கு ஒன்றும் கிடையாதா, அப்பா?'' என்று மிக ஏக்கத்துடன் கேட்டாள் நளினி.

''ஓ! இப்பத்தான் ஞாபகம் வருது. இந்தா, உன் கையை நீட்டு'' என்றவர் நளினியின் கையில் சிவப்பு ஸ்ட்ராப்புடன் கூடிய ஒரு கைக் கடிகாரத்தைக் கட்டிவிட்டு, அவளைப் பாசத்துடன் அணைத்துக்கொண்டார்.

''அது என் கடிகாரம் மாதிரி இருக்கிறதே, ஓ! நீங்கள்தான் எடுத்துக் கொண்டு போனீர்களா? ரொம்பக் கவலைப்பட்டு விட்டேன், போங்கள்'' என்றுள் அம்மா.

''அப்பா, புது ஸ்ட்ராப் போட்டவுடன் புது கடிகாரம் மாதிரியே ஆகிவிட்டது. ரொம்பத் தாங்க்ஸ் அப்பா'' என்றுள் நளினி மகிழ்ச்சியுடன்.

''ஏன் மாமா, எங்களுக்கு மாத்திரம் ஒன்றும் கிடையாதா?'' — இது சிநேகிதிகள் புகார்.


''எனக்கு நீங்க இத்தனை பேர் வருவீங்கன்னு எப்படித் தெரியும்? ஏதாவது இந்த அட்டைப் பெட்டிகளில் இருந்தால்தான் உண்டு'' என்ற நளினியின் அப்பா மிகவும் வருத்தப்படுபவர்போல் முகத்தை வைத்துக்கொண்டு தான் வரும்போது கொண்டு வந்திருந்த இரண்டு பெரிய அட்டைப் பெட்டிகளை எடுத்து முன்னுல் வைத்தார்.

நளினி விரைந்து சென்று அந்த அட்டைப் பெட்டிகளைத் திறந்தாள்.

''ஆ! ஐஸ்கிரீம்!'' என்று அனைவரும் குதூகலத்துடன் கூவினுர்கள். இரண்டு அட்டைப் பெட்டிகளிலும் நிறைய ஐஸ்கிரீம் கப்புகள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன.

அம்மாவுக்கும் நளினிக்கும் ஒரே ஆச்சரியம். கருமியான அப்பா எப்படி இவ்வளவு தாராள குணமுள்ளவராக மாறினுர்? அது ஒரு ரகசியம். அன்று நளினியின் அப்பா காலையில் எழுந்ததுமே நளினியின் முகத்தில்தான் விழித்தார். சற்று நேரத்துக்கெல்லாம் அவருக்குத் தொழிலில் மிக லாபம் வந்திருப்பதாக — ஒரு லட்சம் ரூபாய்க்கு ஆர்டர்கள் கிடைத்திருப்பதாக ஃபோனில் செய்தி வந்தது. நளினியின் முகத்தில் விழித்ததால்தான் லாபம் வந்தது என்று நினைத்த நளினியின் அப்பா தம் மகளின் பிறந்த நாளை மிகச் சந்தோஷமானதாகச் செய்யத் திட்டமிட்டார்.

அதே சந்தோஷத்தில் ரங்கசாமிக்கும் அன்று முதல் சம்பள உயர்வு கிடைத்தது என்று சொல்லவும் வேண்டுமா? அது நிஜமாகவே ஒரு 'ஹேப்பி பர்த்டே', தானே!



விசித்திரப் பொம்மை !

அப்பா வாங்கி வந்திருந்த பொம்மையை ஏற இறங்கப் பார்த்த மாலதி வியப்புடன் ''இது என்னப்பா புதுமையான பொம்மையாக இருக்கிறதே?'' என்று கேட்டாள்.

''ஆமாம், மாலதி! உனக்காக நிறைய காசைப் போட்டு வாங்கி வந்திருக்கேன்!'' என்றார் அப்பா.

''ஆமாம்! இதன் மதிப்பு இவ்வளவு ரூபாய் இத்தனை காசுகள்தானே!'' என்று சில நிமிடங்களில் இந்தப் பொம்மையின் மதிப்பைச் சரியாகச் சொல்லி விட்டாள் மாலதி.

அப்பா பெருமையுடன் அம்மாவை அழைத்துச் சொன்னார்: ''இதோ பார், கமலா! இனி ஏதாவது வாங்கி வரணும் என்றால் மாலதியைக் கடைக்குத் தாராளமாக அனுப்பு. நாலுவது இரண்டு பைசாவுக்குப் பதில் பத்துப் பைசாவைக் கொடுத்துட்டு வந்துடுவேன்! மாலதி சரியாகக் கொடுப்பாள். சில்லறைகளை நன்ருக இனம் புரிந்துகொண்டிருக்கிருள்.''

மாலதியைப் போல் நீங்களும் கெட்டிக்காரர்கள்தானே? எங்கே எதிரே காணும் பொம்மையை ஊன்றிப் பார்த்து அதன் மதிப்பு எவ்வளவு ரூபாய் எத்தனை பைசா என்று சொல்லுங்கள்.


— ரமணி ரங்காதன்

(விடை: இதன் மதிப்பு ரூ. 3—27. பைசாக்கள் வைத்து அதன் விளிம்பின் வடிவம் வழியே வரையப்பட்ட பொம்மை இது.)

புதிர் !

ஒரு சத்திரத்தில் பதின்மூன்று பேர்கள் இரவு தங்குவதற்கு வந்தார்கள். அந்தச் சத்திரம் பதின்மூன்று அடி நீளமும் பத்து அடி அகலமும் கொண்ட செவ்வக அறை. அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஐந்தடி நீளமும் இரண்டடி அகலமும் கொண்ட பாய்கள் இருந்தன. எப்படி எப்படியோ போட்டுப் பார்த்தும் பதின்மூன்று பாய்களையும் சரியாகப் போட முடியவில்லை. கடைசியில் திண்ணையிலிருந்த ஆண்டி சொன்ன வகையில் பதின்மூன்று பாய்களையும் போட்டார்கள். சரியாக இடம் பிடித்து விட்டது. ஆண்டிக்கு நன்றி சொல்லி விட்டுப் படுத்து உறங்கினார்கள். ஆண்டி பதின்மூன்று பாய்களையும் எப்படிப் போடச் சொல்லியிருப்பார் என்று கீழே உள்ள விடையைக் கையால் மூடிக் கொண்டு யோசித்துப் பாருங்கள்.

— ஏசிஎன்





ஜெய் ஹனுமான்
கதை: ரா. கணபதி
சித்திரம்:
34
அன்றிலிருந்து இரவு நேரங்களில் ராமலக்ஷ்மணர் உறங்கும் போது மாருதி, அவர்களை மாய மந்திரங்கள் அணுகா வண்ணம் தம் வாலில் கோட்டை கட்டி அவ்விருவரையும் காத்து வரலானார்.
இலங்கையில் ராவணன்....
பாதாள லோகத்திலிருந்தும் இந்த மனிதப் பதர்களை உயிரோடு மீட்டு வந்து விட்டதே இந்தக் குரங்கு... ம்... இனி போருக்கு நானே போவேன்.
இராவணேசுவரனே போர்க் கோலம் பூண்டு களத்துக்கு வருகிறான். இலக்குவன் அவனை எதிர்க்கிறான்.
இலட்சுமணா! இதோ என் சக்தி ஆயுதத்துக்குப் பதில் சொல் பார்க்கலாம்.
கொடிய சக்தி ஆயுதம் இலக்குவனின் மார்பில் புதைய ரத்தவெள்ளத்தில் அவன் கீழே சாய்கிறான்.
ஹா! லட்சுமணா! மரித்தாயோ நீ? இனி எனக்குச் சீதையால் ஆவதென்ன? இந்த போர்தான் எதற்கு?
இலக்குவனிடம் உயிர் இருப்பதற்கான அறிகுறிகள் உள்ளன. நீ முன் போல உடனே போய்ச் சஞ்சீவி மலையைக் கொண்டு வா.



அநுமான் மறுபடி சஞ்சீவி மலையோடு வர, வானர வைத்தியனான ஸுஷேணன் அதிலுள்ள மூலிகைகளையறிந்துச் சாறு பிழிந்து....
இதோ இன்னும் சற்றைக்கெல்லாம் இலக்குவனார் கண் விழிப்பார் பாருங்கள்!
இலக்குவனார் உயிர் பெற்று எழுகிறார்.
மாருதி, என் அப்பனே! உனக்கு நான் எப்படி என் நன்றியைச் செலுத்துவேன்?
இராவணன் ராமபிரானிடம் போருக்கு வருகிறான். இதை வானோர் கண்டு களிக்கின்றனர்.
இராவணன் தேரிலிருந்து போர் புரிகிறான். ராமபிரானோ தரையிலிருந்து போர் செய்கிறார். இது தகாது. இதோ இப்போதே என் தேரையும் சாரதி மாதலியையும் ராமபிரானுக்கு அனுப்பி வைக்கிறேன்.
இந்திரன் அனுப்பிய தேரிலிருந்தபடி ராமர் ராவணனோடு ஏழு நாட்கள் போர் புரிகிறார். முடிவில் பிரம்மாஸ்திரத்தினால் இராவணன் இதயத்தைப் பிளந்து அவனை வதைக்கிறார்.
என் அண்ணல் வென்றார். அநீதி அழிந்தது. என் அன்னையின் சிறை வாசம் முடிந்தது. ஜெய்! ஸ்ரீராம்!
ஜெய்! ஜெய ராம்! ஜெய்! சீதா ராம்....!
தொடரும்

சரித்திரக் கதைச் சக்கரவர்த்தி

ஸர் வால்டர் ஸ்காட்

1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ந்தேதி, ஸ்காட்லாந்தின் எல்லையோர ஊர்களில் எல்லாம் — எடின்பரோவிலிருந்து இங்கிலாந்தின் எல்லை வரை வரிசையாக இரவு நேரத்தில் சங்கிலித் தொடர்போல் உயரமான இடங்களில் அமைக்கப்பட்டிருந்த தீபங்கள் ஒரே சமயத்தில் கொளுத்தப்பட்டன. அந்த இரவுக்கு அப்படி என்ன விசேஷம்? சரித்திரக் கதைகள் எழுதுவதில் சக்கரவர்த்தியாக விளங்கிய சர் வால்டர் ஸ்காட் அவர்களின் இருநூறாவது பிறந்த நாள் அன்று. அதைக் கொண்டாடவே அத்தகைய கோலாகல தீப அலங்காரம். '' 'நான் ஒரு ஸ்காட்லாந்தியன்' என்று சொல்லிக் கொள்ளுவதில் இன்று பெருமையும் கர்வமும் கொள்கிறோமென்றால் அது வால்டர் ஸ்காட்டினால்தான்'' என்கிறார்கள் ஸ்காட்லாந்துக்காரர்கள். தான் ஒரு ஸ்காட்லாந்துக்காரன் என்று கூறிக் கொள்ளுவதைவிட இங்கிலாந்தைச் சேர்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளுவதைப் பெருமையாகக் கருதிய காலம் ஒன்று இருந்தது. அத்தகைய நிலையை மாற்றி அமைத்தார் தன்னுடைய எழுத்து வன்மையினால் ஸர் வால்டர் ஸ்காட்.

1826ம் வருஷத்து ஜனவரி மாதத்தின் ஒரு காலை வேளை. எடின்பரோ நகரின் தெருவில் இருவர் நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஸர் வால்டர் ஸ்காட். ஏராளமான நாவல்களையும், கதைப் பாடல்களையும் எழுதிப் புகழ்பெற்றிருந்த சமயம் அது. அந்தக் காலத்தில் மிகப் பிரபலமான எழுத்தாளராகவும், செல்வந்தராகவும் விளங்கியவர் ஸ்காட். தன்னுடன் வந்து கொண்டிருந்தவரிடம் ஸ்காட் இப்படிக் கூறினார்: ''நான் ஒரு பிச்சைக்காரன். என்னிடம் இன்று சல்லிக் காசு இல்லை. திவாலா ஆகிவிட்டதாக அறிவிப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை!''

ஸ்காட்டின் நண்பருக்கு நம்பிக்கைப்படவில்லை. வால்டர் ஏதோ 'ஜோக்' அடிக்கிறார் என்றுதான் எண்ணினார். ஆனால் அவர் கூறியது அப்பட்டமான உண்மை. புத்தகங்களை வெளியிடும் பிரசுர நிறுவனங்கள் — இரண்டுடன் வால்டர் ஸ்காட்டுக்குத் தொடர்பிருந்தது, பங்குதாரர் என்ற முறையில். சில நாட்களுக்கு முன்புதான் அவ்விரு நிறுவனங்களும் தொழில் முறையில் படுதோல்வியடைந்து திவாலாகிவிட்டதாகத் தெரிவித்தன. இதனால் ஸ்காட் பல பேருக்கு 1,30,000 பவுன்கள் வரை கடன்பட்டவரானார்.

அப்போது வால்டர் ஸ்காட்டுக்கு ஐம்பத்தைந்து வயது. அவர் நிலையில் வேறு யாராவது இருந்தால் இந்த அதிர்ச்சி தாளாமல் அழிந்துபோயிருப்பார்கள். ஆனால் வால்டர் ஸ்காட் என்ற இந்த அற்புத மனிதர் அப்போதுதான் நிமிர்ந்து நின்றார். 'நான் தர வேண்டிய ஒவ்வொரு பென்னியையும் கொடுத்தே தீருவேன்' என்று உறுதி கொண்டார். எப்படி? எந்தத் துணிவில் அவர் இப்படி ஓர் உறுதி கொண்டார்? அவருக்கு ஒரு வழி இருந்தது. அதுதான் அவருடைய எழுத்து.

தாய் நாட்டின் மீது தணியாத பிரேமை கொண்டவர் வால்டர். ஆனால் பிற நாட்டவரைக் குறைவாக மதிக்கும் குறுகிய மனத்தவரும் அல்ல. இங்கிலாந்தையும் ஆங்கிலேயர்களையும் நேசித்தார், பாராட்டினார். ஆனால் ஸ்காட்லாந்துக்காரனாக இருப்பதில் பெருமைப்படலானார்.

மனோபலம் மிக்கவராக விளங்கியவர் வால்டர். ஆனால் உடல் வலிமையில் ஒப்பற்றவர் என்று கூற முடியாது. சின்ன வயதிலே அடிக்கடி உடல் நலம் பாதிக்கப்படும். நோஞ்சானாகத்தான் இருந்தார். மூன்று வயதில் தாக்கிய ஒரு காய்ச்சல் அவரது ஒரு காலையே



ஊனமாக்கிவிட்டது. வாழ்க்கை முழுதும் அந்தக் கால் வழங்காமல் அவரைச் சற்றுச் சாய்ந்தே நடக்கும்படி செய்து விட்டது. ஸ்காட்லாந்தின் எல்லையோர நகரமான ஸாண்டிக்கோ என்ற இடத்திலிருந்த தாத்தாவின் பாதுகாப்பில் கொஞ்ச நாள் இருப்பதற்கு அனுப்பப்பட்டார் ஸ்காட். மலைகள் சூழ்ந்த அந்த இடம் ஸ்காட் உள்ளத்திலே மங்காத நினைவாக நிலைத்துவிட்டது. மிக மோசமான பருவ நிலையிலும்கூட ஸ்காட்லாந்தின் மலைப் பிரதேசங்களில் சுற்றியலைவார் மகிழ்ச்சியோடு.

ஒரு சமயம் இடியும் மழையும் புயலுமாக இருந்தது. ஸ்காட்டைக் காணவில்லை. உறவினர்களுக்கு ஒரே கவலை. மலைப் பிரதேசமெங்கும் தேடி அலைந்தார்கள். கடைசியில் ஸ்காட்டை எங்கு எந்த நிலையில் கண்டார்கள் தெரியுமா ? ஒரு பாறை மீது நின்று கொண்டிருந்தான் கால் ஊனமான சிறுவன் ஸ்காட். ஒவ்வொரு முறை மின்னல் பளிரிடும்போதும் இவன் கைகளைக் கொட்டியபடி மின்னலைப் பார்த்துக் கூவிக் கொண்டிருந்தான். 'கமான், ஒன்ஸ்மோர், மறுபடியும், இன்னொரு முறை !' என்று.

அத்தை ஜேனட், ஸ்காட்லாந்தின் சரித்திரத்தைப் படித்துக் காட்டுவாள் ஸ்காட்டுக்கு. நாடோடிப் பாடல்களைப் பாடிக் காட்டுவாள். ஸ்காட்லாந்தின் கடந்த காலப் பெருமைகளைக் கேட்டுப் பரவசமாகிப் போவான் சிறுவன் ஸ்காட். தாத்தாவின் பண்ணைக்குப் பக்கத்திலே பதினாம் நூற்றாண்டைச் சேர்ந்த பழைய கோட்டை ஒன்று இருந்தது. அதனுள் சென்று ஆராய்வதில் அலுப்பே ஏற்படாது. அந்தக் கோட்டையில் பண்டைக் காலத்தில் நிகழ்ந்த சாகஸங்கள் உயிர்பெற்றுச் சிறுவன் ஸ்காட்டின் கற்பனைக் கண் முன்னே வரிசையாக வந்து நிற்கும்.

ஸ்காட்டின் பள்ளிப் படிப்பும் கலாசாலைப் படிப்பும் எடின்பரோவில் நிகழ்ந்தன. பள்ளி நாட்களில் மிகச் சிறந்த மாணவனாக விளங்கவில்லை அவர். சோம்பேறி என்றே பெயரெடுத்தார். அடிக்கடி உடல் நலம் பாதிக்கப்படுவதினால் பள்ளிப் படிப்பும் பாதிக்கப்பட்டது. சிறு ஊனக்கால் வேறு. படுக்கையில் இருந்தபடியே படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொண்டான் சிறுவன் ஸ்காட். எந்தப் புத்தகமானாலும் சரி — பிரயாண நூல், சரித்திரம், கவிதை, நாவல்கள் படித்துக் கொண்டே இருப்பான்.

1786ல் தகப்பனாரின் சட்ட அலுவலகத்தில் வேலை பழகிக் கொள்ள ஆரம்



பித்தார் ஸ்காட். வழக்கறிஞராகத் தன் மகன் வரவேண்டும் என்பது தந்தையின் ஆசை. ஆனால் ஸ்காட்டின் எண்ணமெல்லாம் வேறுவிதமாக இருந்தது. தாய் நாட்டின் கடந்த காலச் சரித்திரங்களைத் தேடி அலைவதிலேயே ஆவலாக இருந்தார் இளைஞர் ஸ்காட். ஊனமான காலானாலும் நடப்பதற்கு அஞ்சமாட்டார். மலைப் பிரதேசங்களில் கால் நடையாகவும் குதிரை மீதும் சதா சுற்றிக் கொண்டிருப்பார். ஆங்காங்கே வழங்கும் சாகஸக் கதைகளைக் கேட்பார். தான் கேட்டவைகளைக் குறிப்பெடுத்துக் கொள்ளுவார். இப்படி ஸ்காட்லாந்து முழுதும் பிரயாணம் செய்து தான் கண்ட, கேட்ட செய்திகளையும் கதைகளையும் நினைவில்கொண்டு 'ஸ்காட்லாந்து எல்லையோரத்துப் பாடல்கள்' என்ற புத்தகத்தை எழுதினார். நாட்டுப் பாடல் கதைகளில் கொண்ட மோகம், சொந்தமாகவே கதைப் பாடல்களை உருவாக்க வைத்தன. 1805ம் ஆண்டுவாக்கில் வால்டரின் முதல் நீண்ட கதைப் பாடல் வெளியாயிற்று. ஸ்காட்லாந்தின் பழம் பெருமையையும் கம்பீரத்தையும் அதில் வார்த்தைகளில் வடித்திருந்தார் ஸ்காட். அதைப் படித்தவர்கள் அதன் சொல்வழகில் சொக்கிப் போனார்கள். மெல்ரோஸ் அபே என்பது அந்தப் பிராந்திய மக்களுக்கு அது வரை ஒரு பாழடைந்த புராதனச் சின்னமாக இருந்தது. ஸ்காட் தம் பாடல்களில் அதை வர்ணித்திருந்த முறை — பால் நிலவிலே குளித்தபடி நிற்கும் அந்தப் பளிங்கு மண்டபம் — அது முழுமையாக ஜீவனுள்ளதாக இருந்த போது எப்படி இருந்திருக்கும் என்பதைக் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்துவதாக

இருந்தது. பிற்காலத்தில் ஸ்காட் எழுதிய நாவல்களிலும் இதே மந்திர சக்தி வாய்ந்த அழகு நடையைக் கையாண்டிருந்தார்.

1805ல் தன் புத்தகங்களை வெளியிடும் நிறுவனத்தில் ஒரு கூட்டாளியானார் வால்டர். எழுத்தோடு நிறுத்திக் கொண்டிருந்தால் சர் வால்டர் ஸ்காட் பெரிய கோடீசுவரராகி இருப்பார். ஆனால் பிறருடைய எழுத்துக்களையும் புத்தகமாக்கும் ஆவலில் புத்தகத் தயாரிப்பில் ஈடுபட்டார். இவரது எழுத்துக்களைப் போல் மற்றவர்களுடையவை விலை போகவில்லை. தவிர பிரசுரத் துறையில் இவருக்கு எதுவுமே தெரியாது. கூட்டாளிகள் இவரைக் கடனாளியாக்கிவிட்டார்கள்.

ஸர் வால்டர் ஸ்காட் சரித்திர நாவல்கள் எழுத ஆரம்பித்ததே ஒரு ரசமான சம்பவம். அவரது நண்பர்களுக்கு அவர் நாவல்கள் எழுதுவது பிடிக்கவில்லை. பாலே, (Ballad) எனப்படும் கதைப் பாடல்கள் எழுதுவதையே விரும்பினார்கள். ஆனால் வால்டர் அப்போது ஒரு நாவலைக் கொஞ்சம் உருவாக்கி இருந்தார். பிறகு அதை முடிக்காமலே தூக்கி மூலையில் போட்டிருந்தார். கடனை அடைக்கும் நெருக்கடி வந்தபோது அதை ஒரு நாள் எடுத்து ஒரே மூச்சில் முடித்து வெளியிட்டார். அதுதான் வேவர்லி என்ற புகழ் பெற்ற நாவல். மக்களிடையே அதற்கு அமோகமான வரவேற்பு இருப்பதைக் கண்ட வால்டர் அதன் பிறகு ஒன்பது நாவல்களை உருவாக்கிப் பொருள் ஈட்டினார்.

தன் தாய்நாட்டின் பெருமையைத் தன் எழுத்தினால் மட்டும் உயர்த்தியது போதாதென்று அதனிடம் தாம் கொண்டுள்ள அளவிட முடியாத பற்றுதலை வெளிப்படுத்த எல்லைப் பகுதியில் ஒரு பெரிய மாளிகையை எழுப்புவதில் தன் வாழ்நாளின் பெரும் பகுதியையும் பெரும் பொருளையும் செலவிட்டார். ஆபட்ஸ்ஃபோர்டு என்பது அவர் நிர்மாணித்த அரண்மனைக்குப் பெயர். அந்தக் கட்டடத்தைச் சூழ்ந்துள்ள பொட்டலான மலைப் பிரதேசத்தைச் சோலையாக்க ஆயிரக்கணக்கான மரங்களை நட்டுப் பயிராக்கினார். அந்தப் பகுதியில் சில வருடங்களில் ஒரு கானகத்தையே உருவாக்கிவிட்டார். சர் வால்டர்ஸ்காட்டின் கனவு மாளிகையை இன்றைக்கும் ஆண்டுதோறும் 35000 உல்லாசப் பிரயாணிகள் வந்து பார்த்து மகிழ்ந்து போகின்றனர். இவருடைய வருவாயையெல்லாம் விழுங்கி



உற்ற சொந்தம் உலகினிலே அன்னை ஒருத்திதான் - அவள்
உண்ணுவதும் உறங்குவதும் உன்னை நினைத்துத்தான் - உனைப்
பெற்றபோதில் பெரிதுவக்க வழியும்கண்டு பார் - நீ
பெரியவர்கள் போற்ற நாளும் ஒழுக்கம் கொண்டு வாழ்

- குடுக்கையார்

ஏப்பம் விட்டது இந்த ஆபட்ஸ் ஃபோர்டு அரண்மனை.

ஸ்காட்லாந்தை அரசாண்ட மன்னர்களின் அரச சின்னங்களைக் கண்டு பிடிப்பதற்குக் காரணமாக இருந்தார் ஸ்காட். எடின்பரோ கோட்டையில் எங்கோ ஓர் இடத்தில் ஒரு பேழையினுள் அவை பத்திரப்படுத்தி வைக்கப் பட்டிருந்தன. அதை வெளி உலகுக்குக் கொண்டு வந்தபோது ஸ்காட்லாந்து மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அதற்குக் காரணமான ஸர் வால்டர் ஸ்காட்டைப் புகழ்வதற்குக் அவர்களிடம் வார்த்தைகளே இல்லை.

நிகழ்காலம் முழுமையாகவும் வளமாகவும் இருக்க வேண்டுமானால் இறந்த காலத்தின் பெருமையைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பார் ஸ்காட். ஸ்காட்லாந்தின் பழம் பெருமையை மட்டும் அவர் எழுத்தில் வடிக்கவில்லை. இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய தேசங்களின் பழம் பெருமைகளுக்கும் தம்முடைய சரித்திர நாவல்கள் மூலம் உயிரூட்டினார். ஸர் வால்டர் ஸ்காட்டின் நாவல்களைப் பற்றி உங்கள் பெரிய அண்ணனிடமோ, அப்பாவிடமோ கேளுங்கள். ஐவான்ஹோ, கெனில் வொர்த், க்வெண்டின்டர்வர்டு, ராப்ராய் என்ற நாவல்களைப் பற்றியெல்லாம் நிறையச் சொல்லுவார்கள். பதினொரு ஆண்டுகளில் இருபது நாவல்களை எழுதினார் வால்டர் ஸ்காட். இவர் சிறந்த மேதை மட்டும் அல்ல. கவிஞர், நாவலாசிரியர், வழக்குரைஞரும்கூட. மனோ பலமும் உடல் வலிமையும் மிக்கவர். களைப்பையே அறியாதவர். மலைப் பிராந்தியத்தில் மின்னல் வேகத்தில் குதிரையை விரட்டிக் கொண்டு போவார். பகலெல்லாம் எழுதுவார் பிற்பகலுக்குப் பிறகு குதிரைச் சவாரி. மாலை வேளைகள் நண்பர்களைச் சந்தித்து அளவளாவுவதற்கு. அயர்வே இல்லாமல் கடைசி வரை உழைத்தார். ஈட்டிய பொருளையெல்லாம் பட்ட கடனுக்கும் கட்டிக்கொண்டிருக்கும் பங்களாவுக்குமே செலவழித்தார். சட்டப்படி இவர் அத்தனை பெருந் தொகைக்குக் கடனாளியாக வேண்டியதில்லை. ஆனால் தார்மிகப் படி அதைத் தம் கடமையாக ஏற்றுக் கொண்டு கடனையெல்லாம் அடைத்தார். அதற்காக ஆறு வருஷங்கள் ஏராளமாக எழுதிக் குவித்தார் இடையறாது. எப்போதும் உற்சாகமாக இருப்பார். யாரையும் எதற்காகவும் குறைகூற மாட்டார்.

பட்டங்கள் தேடி வந்தன. செல்வம் குவிந்தது. ஆனாலும் எளிமையாகவே வாழ்ந்தார். இவருடைய பணியாளன் (பட்லர்)கூட அரைச் சம்பளத்துக்கு இவரிடம் இரு மடங்கு உழைத்து வந்தான்.

ஸர் வால்டர் ஸ்காட் 1832ல் இறக்கும் போது அவர் கொடுக்க வேண்டிய கடன் 54000 பவுன்கள் பாக்கி இருந்தன. ஆனால் அதற்கும் வழி செய்து விட்டே நிம்மதியாகக் கண்ணை மூடினார். சரித்திரக் கதைகளை எழுதுவதில் சக்கரவர்த்தியாக விளங்கிய வால்டர் ஸ்காட். தன்னுடைய சில நாவல்களின் உரிமைகளை விற்றும், இன்ஷ்யூரன்ஸ் பணத்தைக் கொண்டும் எல்லாக் கடன்களையும் தீர்த்துத் தம் வார்த்தையைக் காப்பாற்றி விட்டார்.

— கிருஷ்ணவேணி

எறும்புகள் தந்த விருந்து



குட்டைக்குள்ளே யிருந்த தவளை தரைக்கு வர ஆசை கொண்டது. தரை மீது தத்தித் தத்தி நடந்த தவளை, வழியைத் தவற விட்டுவிட்டு விழித்தது. எறும்புகள் தவளையைக் கண்டு ஆச்சரியப்பட்டன.

" தண்ணீருக்குள் இருக்க வேண்டிய நீ எப்படித் தரையிலே இவ்வளவு தூரம் வந்தாய் ?" என்று கேட்டது எறும்பு. தவளை பதில் கூறவில்லை. துக்கம் தொண்டையை அடைக்கவே பேசாமல் கண்ணீர் விட்டது. பல எறும்புகள் தவளையின் கண்ணீரைத் துடைத்தன.

"நீ கவலைப்படாதே. இன்று இரவு எங்களோடு இரு. உனக்குப் பசியாற உணவு தருகிறோம், தூங்கு. காலையில் உன் வீடான குட்டைக்கு வழி காட்டுகிறோம்" என்ற எறும்புத் தலைவனின் பேச்சைக் கேட்டுத் தவளை தலை ஆட்டியது. எறும்புகள் தங்கள் இரவுச் சாப்பாட்டுக்காகச் சேமித்து வைத்திருந்த உணவைத் தவளைக்குக் கொடுத்தன. வயிறு புடைக்கத் தின்ற தவளை நன்றாகத் தூக்கம் போட்டது.

பொழுது விடிந்தது. நன்றியோடு எறும்புகளைப் பார்த்தது, தவளை. "உங்கள் உதவியை என்றும் மறக்க மாட்டேன். என் வீட்டில் இன்று உங்களுக்கு விருந்து வைக்கப் போகிறேன். அனைவரும் வருக, வருக" என்ற தவளையைப் பின்தொடர எறும்புகள் ஆயத்தமாயின.

ஓர் எறும்பு அறிவாளி. தவளைக் காலடிகளைப் பின்பற்றியே வழிகாட்டிச் சென்றது. பின்னால் தவளை, அதை அடுத்து எறும்புகள். பெரும் படை நகர்வதுபோலிருந்தது.

தன் வீட்டைக் கண்டுவிட்ட தவளை ரொம்ப மகிழ்ச்சி அடைந்தது. எறும்புகளை நோக்கி அது சொல்லியது :

" உயிருக்குயிரான நண்பர்களே ! இங்கேயே இருங்கள். இதோ நான் குட்டைக்குள் போய் வந்து உங்களை விருந்துக்கு அழைத்துப் போகிறேன்."

தவளை குட்டையில் குதித்தது.

நெடு நேரமாகியும் அது திரும்பவில்லை.

எறும்புகள் காத்திருந்து, காத்திருந்து பசியால் வாடின. தவளையோ எறும்புகளுக்கு எப்படி விருந்து வைப்பது என்ற திகிலில், தண்ணீருக்குள் விழித்துப் பார்த்தபடியே கிடந்தது.

மாலையும் வந்தது. தலைமை எறும்பு என்ன சொல்லுமோ என மற்ற எறும்புகள் எதிர்பார்த்தன. எறும்புத் தலைவன் கூறினான் :

"நண்பரே ! மகளிரே !

வணக்கம். தவளையை நம்பி வந்து நாம் திண்டாடுகிறோம். அது நமக்கு விருந்து வைப்பதாக இல்லை. வயிற்றை இறுக்கக் கட்டிக் கொள்ளுங்கள். திரும்புங்கள். நம் வீட்டுக்குப் போவோம். ஆபத்தில் நாம் அதற்கு உதவியதற்கு நமக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்." எறும்புகள் திரும்பிச் சென்றன. தண்ணீருக்குள்ளிருந்தபடி கண் விழித்து விழித்துத் தவளைக்கு முட்டைக் கண்களாயின. தவளை தண்ணீருக்கு மேலே வந்து பார்த்தது. எறும்புகள் இல்லாததைக் கண்டது.

அன்றையிலிருந்து எறும்புகளுக்கு வயிறு சிறுத்துவிட்டது; தவளைகளுக்குக் கண்கள் பெரிதாகி விட்டன.

— மங்கராபாத் ப. சிதம்பரம்




"என்னப்பா பாத்துக்கிட்டேருக்கீங்க?"

"இந்த முனியன் கொண்டு போய் விட்ட எலிகள் எல்லாம் அப்பவேதிரும்பி வந்தாச்சு. இன்னும் இவனைக் காணலேயே!"

"இந்த மாதிரி ஏராளமா செலவு பண்ணி மனைவி மக்களுக்குப் பட்டும் பட்டாடையுமா வாங்கித் தந்து கடன்காரர் பிடியிலே மாட்டிக் கொண்டு தவிக்கப் போகிறீர்கள்."

"மனைவி மக்கள் பிடியில் அகப்பட்டுக் கொண்டு தவிப்பதை விட அது ரொம்பத் தேவலை சார்!"





காக்கை: நரியாரே ஏன் வாட்டமா இருக்கிறீர்கள்? ஒரு பாட்டுப் பாடட்டுமா?

நரி: வேண்டாம். உன் வாயில் வடை இல்லாமல் என்ன பாட்டு வேண்டிக் கிடக்கு?

"எனக்குத் தலைவலி வந்தால் ஆஸ்பிரின், வயிற்று வலிக்கு சோடா பை-கார்பனேட், ஜுரம் வந்தால் பட்டினி போடுவேன். இதெல்லாம் சரியான சிகிச்சைதானு டாக்டர்?"

"கரெக்டாச் செய்கிறீர்கள். இந்தக் கன்ஸல்டிங்குக்குப் பீஸ் பத்து ரூபாய். அதையும் கரெக்டாக் கொடுத்துடுங்கோ!"



சாமா



சிரிக்கச் சிரிக்க



ஆலமரத்தின் முழுத் தோற்றம்

ஓர் ஆலமரத்தின் கதை

தமிழகத்தில் சென்னை அடையாற்றிலுள்ள ஆலமரத்தைப் போன்று மேற்கு வங்காளத்திலும் ஓர் ஆலமரம் இருக்கிறது.

கல்கத்தாவுக்கு அருகில் சிப்பூர் என்னும் இடத்தில் பெரிய பூங்கா ஒன்று உள்ளது. இப்பூங்காவில் இரண்டு நூற்றுண்டுகளாக இம்மரம் இருந்தபோதிலும் இன்னமும் பசுமையாக இருக்கிறது.

தூரத்திலிருந்து இந்த மரத்தைப் பார்த்தால் ஒரு காடு போன்று தோற்றம் தருகிறது. இம்மரத்தின் பல்வேறு கிளைகளிலிருந்து கீழே இறங்கும் விழுதுகள் பூமிக்குள் சென்று இம்மரத்துக்குப் பலம் தருகின்றன.

இப்போது அந்த ஆலமரம் இரண்டு ஹெக்டேருக்கும் அதிகமான நிலப்பரப்பில் பரவியுள்ளது. 1100க்கும் அதிகமான விழுதுகளையும் தற்சமயம் பெற்றிருக்கிறது.

ஆலமரத்தின் நடுப் பகுதியில் உள்ள மூல அடிமரத்தின் பல பகுதிகள் பழைமையின் தழும்பேறிக் காணப்படுகின்றன. 'மனிதர்களின் முதுமை நிலைச் சுருக்கங்கள்' போன்று இவை காணப்படுகின்றன என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆலமரத்தை ''ஃபைகஸ்'', ''பெங்கலென்சிஸ்'' என்று தாவர இயல் நிபுணர்கள் அழைக்கின்றனர். நம் நாட்டில்தான் ஆலமரம் முதன் முதலில் தோன்றியது. ஆலமரத்தின் பழம் சிவப்பாக இருந்தாலும் உண்ணத் தகுந்தது அல்ல.

இந்தியாவிலேயே இந்த ஆலமரம் தான் மிகப் பெரியது. ஆசியாவிலேயே மிகப் பெரிய மரமாகவும் இருக்கலாம் என்பது பலரின் கருத்து.

இந்த மரம் எப்போது நடப்பட்டது என்பதற்கு ஆதாரம் இல்லை. சுமார் 187 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1787ம் ஆண்டு இப்பூங்கா நிறுவப்பட்டது. அப்போது பூங்காவிலுள்ள ஈச்ச மரத்தில் வளர்ந்திருந்ததாகச் சுற்றுப்புறக் கிராமத்தவர்கள் கூறுகின்றனர்.

பின்னர் ஆலமரம் ஈச்ச மரத்தினின்று விலகிப் பூமியில் வேரூன்றிச் செழித்து வளர்ந்திருக்கிறது.

1864, 1867 ஆண்டுகளில் ஏற்பட்ட புயல்களால் இம்மரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இருந்தாலும் தொடர்ந்து வளர ஆரம்பித்தது.

''இந்தியா, இலங்கை, செங்கடல் நாடுகள் சுற்றுப் பயணம்'' என்ற நூலின் 39ம் பக்கத்தில் இம்மரத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார் வாலண்டியா என்னும் பிரபு. அவர் சுற்றுப் பயணம் மேற்கொண்ட 1803 ஆண்டில். ''இந்தப் பூங்காவில் ஒவ்வொருவரும் காண வேண்டியது இந்த மரத்தையே'' என்றும் அந்நூலில் குறிப்பிட்டிருக்கிறார்,

1913ல் இந்த மரத்தின் வேர்ப்பாகம் காளான் தொல்லையால் பாதிக்கப்பட்

டது. காளானால் மூல மரமும், கிளை மரங்களும் அழிக்கப்பட்டன. எல்லா வகையான காளான் தடுப்பு முயற்சிகளை எடுத்தும் மரம் தன் சத்துக்களை இழந்து கொண்டு வந்தது.

அப்போது பூங்காவிலிருந்து வெளியான அறிக்கையில் ''ஆலமரத்தைப் பாதுகாத்துப் புத்துயிர் அளிப்பதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும் இந்த மரம் வளருமா, அல்லது பட்டுப் போய்விடுமா என்பதைக் காலம் தான் தீர்மானிக்க வேண்டும்'' என்று எழுதியிருந்தார்கள்.

பிரிட்டிஷ் அரசுக்குச் சொந்தமான தாவரத் தோட்டத்திலிருந்து வெளியான அறிக்கையும் 'நாளாவட்டத்தில் பட்டுப் போய்விடும்' என்று கூறியதுடன் 'மரம் பிழைக்க வேண்டுமானால் மரத்தின் நடுப் பகுதியை வெட்டிவிட வேண்டும்' என்றும் கூறியது.

1961—62-லும் வண்டு, புழு, காளான்களால் தொல்லை ஏற்பட்டது இதற்கு. தடுப்பு நடவடிக்கைக்குப் பிறகு பாதுகாக்கப்பட்டது.

இந்த மரத்தைப் பாதுகாப்பதற்காக மிகப் பெரிய தெளிக்கும் கருவியைக் கொண்டு பூச்சி மருந்து தெளிக்கப்படுகிறது.

இந்தத் தெளிப்பானை மாநில விவசாய இலாகாவிடமிருந்து இந்தப் பூங்கா பெற்றிருக்கிறது.

காளான்கள், புழுக்கள், ஆகியவற்றினின்று மரத்தை விரைவில் காப்பாற்றிவிட முடியும். பழைமையான அடி மரத்தைக் காளான் தாக்கியபோதிலும் தென் கிழக்குத் திசையில் உள்ள கிளைகள் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கின்றன.



ஆலமரக் கூட்டத்தின் அடிப் பகுதி


இந்த மாதிரி உங்கள் ஊரில் ஏதாவது அதிசயம் இருந்தால் கோகுலத்துக்குப் புகைப் படத்துடன் எழுதுங்களேன்!

— பாவை சந்திரன்

✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲

நீண்டதொரு கலர் காகிதத்தைக் குழாய் போல் சுற்றிக் கொள்ளுங்கள். அதன் முன் பகுதியைப் படம் 1ல் உள்ளபடி கத்திரியால் வெட்டுங்கள். படம் 2ல் உள்ளபடி இதழ்களை மடக்கி, படம் 3ல் உள்ளவாறு பிடியைச் சிறிது தளர்த்தி, நடு இதழைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுழற்றி இழுங்கள். கடைசியாக உங்களது ஒரு விரலால் நடு மையத்தைக் கீழ்நோக்கி அழுத்துங்கள் (படம் 4). ஆகா! இப்போது அருமையான ஒரு தாமரைப் பூ உங்கள் கரங்களில் உருவாகிவிடும்!

— மூதன்



தெரியுமா?



1693. பெல்ஜியத்தின் 'பருத்தி நகரம்' என்று புகழ்பெற்ற நகரின் பெயர் என்ன?

1694. இங்கிலாந்திலுள்ள யார்க்ஷயர் மாகாணத்தில் ஒரு நகரம், வெட்டுக் கருவிகள் செய்வதற்கு உலகப் புகழ் பெற்றது. அதன் பெயர் என்ன?

1695. லிமா எதன் தலைநகரம்?

1696. வாட்டர்லூ போரில் பிரிட்டிஷ் ராணுவத்துக்கு ஒரு ஐரிஷ்காரர் தலைமைதாங்கி நடத்திச் சென்றார். அவர் பெயர் என்ன?

1697 சிம்ப்ளான் (Cymplan) டன்னல் (குடை வழி) எந்த இரு நாட்டுகளை இணைக்கிறது?

1698. மார்சேல்ஸ் துறைமுகம் எந்தக் கடலில் உள்ளது?

1699. பிரான்ஸ் நாட்டினர் தயாரித்த ஒரு வகை விமானம் பாரத நகரங்களுக்கிடையே போக்குவரத்துக்குப் பயன்படுகிறது. இதன் பெயர் என்ன?

1700. உதயசங்கர் எந்தக் கலையினால் புகழ் பெற்றவர்?

1701. ஸெக்யுலரிஸம் (Secularism) என்றால் என்ன?

1702. ஹைஃபா துறைமுகம் எந்த நாட்டிலுள்ளது.

1703. மௌஸகா (Mousaka) என்பது எந்த நாட்டின் தேசிய உணவு?

1704. பசிபிக் கடலில் உள்ள ஒரு தீவுக்கு ஸாலோட் (Salote) என்பவர் ராணி. அது எந்தத் தீவு?

1705. ஷேக்ஸ்பியரின் புகழ்பெற்ற ஹாம்லெட் என்ற நாடகம் எல்ஸினோர் (Elsinore) என்ற கோட்டை அரண்மனையை நிலைக்களனாகக் கொண்டது. இந்த அரண்மனை எந்த நாட்டில் இருக்கிறது தெரியுமா?

1706. நைல் நதியின் உற்பத்தி எதிலிருந்து என்று சொல்ல முடியுமா?

1707. உலகிலேயே மிக உயரமான தொங்குபாலம் (Suspension) எங்கு உள்ளது?

1708. ஐ. நா. சபையில் கம்யூனிஸ்ட் சீனாவுக்கு இடம் கிடைத்த அதே சமயத்தில் ஒரு தேசம் அங்கிருந்து வெளியேற்றப்பட்டது. அது எந்த நாடு தெரியுமா?

1709. ஒட்டைச்சிவிங்கி எத்தனை அடிகள் உயரம் வரை வரளக்கூடியவை?


1710. ஆந்தைகளில் மொத்தம் எத்தனை வகைகள் உண்டு, தெரியுமா?

1711. மற்றப் பறவைகளின் கண்களைப் போல ஆந்தைகளின் கண்கள் அதன் விழிக் குழிக்குள் இலகுவாக அசைவதில்லை. கண்கள் இரண்டும் முகத்தின் முன்னாலேயே — பக்கவாட்டில் இல்லாமல் — இருக்கின்றன. இந்தக் குறைபாட்டுக்கு ஈடு செய்வதுபோல் இயற்கை ஆந்தைக்கு என்ன வசதியைச் செய்திருக்கிறது?

1712. ஆந்தை முட்டைகளின் — அமைப்பு, நிறம் என்ன என்று தெரியுமா?

1713. நீந்துவதில் வல்லவராக ஒருவர் மூன்று ஒலிம்பிக் தங்கப் பதக்கங்களையும், ரிலே தங்கப் பதக்கங்கள் இரண்டையும் பெற்றவர். பல டார்ஜான் படங்களில் கதாநாயகனாக நடித்தவர். இவர் பெயர் என்ன?

தெரியுமே!



1693. கெண்ட் (Ghent). பருத்தி நகரம் என்று பேர் பெற்றாலும் இங்கு அனைத்தும் சணல் ஆலைகளே. 1694. ஷெஃபீல்டு நகரம். 1695. பெரு நாட்டின் தலைநகர். 1696. ஆர்தர் வெல்லஸ்லி. 1697. இத்தாலியையும் பிரான்ஸ் நாட்டையும். 1698. மத்தியதரைக் கடலில். 1699. காரவில். 1700. சாஸ்திரிய பரதநாட்டியத்தினால். 1701. எல்லா மதங்களுக்கும் சம அந்தஸ்து அளிப்பது. 1702. இஸ்ரேல் நாட்டில். 1703. கிரீஸ் நாட்டினுடையது. 1704. டோங்கா (Tonga) என்ற தீவுக்கு. 1705. டென்மார்க்கில். 1706. விக்டோரியா ஏரி. 1707. அமெரிக்காவிலுள்ள ஆர்கன்ஸாவில். கொலராடோ நதியின் மீதுள்ள இப்பாலம். நீர் மட்டத்துக்கு மேலே 1053 அடிகள் உயரமுள்ளது இப்பாலம். 1708. தாய்வான். 1709. பதினேழு அடி உயரம் வரை. 1710. நூற்று முப்பத்து மூன்று வகை ஆந்தைகள். 1711. ஆந்தையினால் தன் தலையை முழுதும் (180 டிகிரி கோணம் வரை) சுழற்றிப் பார்க்க முடியும். 1712. முழு உருண்டையாகவும் வெண்மையாகவும் இருக்கும். 1713. ஜானி வீஸ் முல்லர்.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்


வாழ்க்கையில் அதிர்ஷ்டமுள்ள ஆடவர் ஒருவரை மீண்டும் சந்திக்கும்போது...
...அவர் அணிந்துள்ள ஆடைகளின் அழகையும் பாருங்கள்!